விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 07 வெள்ளிக்கிழமை (23.08.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 247

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## ஆஸியின் கோரச் செயல் 46 தமிழர்கள் தடுத்து வைப்பு

### ஐ.நா. குற்றச்சாட்டு

(கொழும்பு)

**அகதிகளாக அங்கீகரிக்கப்பட்டவர்கள் 46 பேரை பாதுகாப்பு காரணங்களைக் காட்டி அவுஸ்திரேலியா காலவரையின்றி தடுத்துவைத்திருப்பது கொடூரமான மனிதத் தன்மையற்ற இழிவு படுத்தும் விதமான செயல் என்று ஐ.நா. சாடியுள்ளது.**

அவுஸ்திரேலியாவின் இந்தச் செயல் காரணமாக தடுத்து வைக்கப்பட்டவர்கள் கடுமையான உளவியல துன்பங்களுக்கு ஆளாகியுள்ளனர் என்று இவர்களது வழக்குகளை பரிசீலித்த ஐ.நா. குழுவொன்று கண்டறிந்துள்ளது.

குறைந்தது இரண்டரை ஆண்டு காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தத் அகதிகளை அவுஸ்திரேலியா உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். அவர்களுக்கு நஷ்டஈடும் புனர்வாழ்வும் அளிக்க வேண்டும் என ஜெனீவாவிலிருந்து இயங்கும் மனித உரிமைகள் குழு கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கைத் தமிழர்கள் 42 பேர், மியன்மாரிலிருந்து சென்ற ரோஹிஞ்சாக்கள் 3 பேர், குவைத் பிரஜை ஒருவர் ஆகியோர் அடங்கிய இந்த அகதிகள் தாங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைக் குழுவிடம் முறை (19ஆம் பக்கம் பார்க்க)

## நவநீதம்பிள்ளைக்கு எதிராக அத்துரலிய தேரர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை வருவது தொடர்பில் தனது எதிர்ப்பை வெளியிடுவதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் செய்த குற்றங்களை அல்ல பயங்கரவாத அமைப்புகளினால் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களை ஆராய்ந்து பார்க்கும் காலம் ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு வந்துள்ளதாக அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை நாளை மறுதினம் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

எதிர்வரும் 31 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் அவர், பல்வேறு தரப்பினரைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்த உள்ளதுடன் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கும் விஜயம் செய்ய உள்ளார்.

அண்மையில் மிகவும் பரபரப்பை ஏற்படுத்திய வெலிவேரிய பிரதேசத் (20ஆம் பக்கம் பார்க்க)

## 'விலகி விடுவோம்' ஹெல உறுமய எச்சரிக்கை

(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடிய சாதகமான நிலைப்பாட்டை எடுக்காவிட்டால் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இருந்து விலகி விடுவோம் என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது. வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்தியாவில் 13-வது திருத்தச் சட்டம் தொடர்பில்எதனை கூறினாலும், நாட்டுக்கு நன்மை ஏற்படும்வகையில் இந்திய பிரதமர் மன்மோகன சிங்குடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் 13-வது திருத்தச் சட்டத்தை அரசாங்கம் பாதுகாக்கும் என அமைச்சர் பரிஸ் தெரிவித்திருந்ததாக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகி இருந்தன.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிஷாந்த சிறி வர்ணசிங்க மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், 13-வது திருத்தச் சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும் என்ற கொள்கையில் ஜாதிகஹெலஉறுமய தொடர்ந்தும் உள்ளது. இந்த நிலைப்பாட்டில் இருந்து கொண்டு, 13-வது திருத்தச் சட்டம் தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக குழுவில் ஹெல உறுமய பங்கேற்கும்.


அரசாங்கம் செப்டம்பர் 21 ஆம் திகதிக்கு முன்னர் ஏற்று கொள்ளக் கூடிய சாதகமான நிலைப்பாட்டை எடுக்காவிட்டால் ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இருந்து விலகிவிடும் என்றும் தெரிவித்துள்ளார். (எ-11)

## இந்தியாவின் வாக்குறுதியே வடக்கு மாகாணத் தேர்தல்

### ரில்வின் சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவிற்கு வழங்கிய வாக்குறுதியின் பிரகாரமே வடக்கில் தேர்தல் நடத்தப்படுவதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரதம செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.



கல்கமுவ பகுதியில் நடை பெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த கருத்தை தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## நீர்வழங்காததற்கு எதிராகவே அரசு குண்டுகளை பொழிந்தது

### அமைச்சர் ரோஹித தெரிவிப்பு

(கொழும்பு)

புலிகள் மக்களுக்கு நீரை வழங்காததற்கு எதிராகவே குண்டுகளை பாவித்தோமே தவிர, அப்பாவி மக்களுக்கு எதிராக குண்டுகளை பாவித்தது கிடையாது என அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் சபையில் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று நடத்திருக்கக்கூடாத துர்பபாக்கிய சம்பவமானது வெலிவேரிய ரத்துபஸ்வல பிரச்சினையை பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சி கிளப்பியுள்ளது. ஐ.தே. கட்சிக்குள் இன்று பிரச்சினைகள் தலை தூக்கியுள்ளன. அதனை மூடிக் கொள்வதற்கே இப்பிரச்சினையை கிளப்பியுள்ளனர்.

நீருக்காக குண்டுகளைப் பாவித்தோம். அன்று விடுதலைப் புலிகள் மாவிலாறு நீர்த்தேக்கத்தை மூடிய போது எமது தலைவர் குண்டுகளைப் பாவித்தார். விடுதலைப் புலி பயங்கரவாதத்தை ஒழிக்கும் ஆரம்பத்தை ஜனாதிபதி அன்று ஆரம்பித்து அதனை முடித்துக் காட்டினார்.

நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்து தொழிற்சாலைகளை மூடினால்தான் ஜே.வி.பி.க்கு அரசியல் இருப்பு இருக்கின்றது அதற்கே முயற் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர்களை மீள அனுப்ப இடைக்காலத்தடை

### சென்னை உயர் நீதிமன்றம் தடைவிதிப்பு

(சென்னை)

சென்னை உயர்நீதி மன்றம், இலங்கைத் தமிழர் ஈழ நேரு அவரது நாட்டிற்கு திரும்ப அனுப்பப்படுவதற்கு இடைக்காலத்தடை விதித்திருக்கிறது.

ஈழ நேரு, செந்தூரன், இத்தாலியராஜன் என்று அழைக்கப்படும் சுந்தரராஜன் ஆகிய மூன்று இலங்கைத் தமிழர்களை திரும்ப அவர்களின் நாட்டிற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியானதையடுத்து அவ்வாறு அவர்கள் திருப்பி அனுப்பப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ பிரதமர் மன்மோகன் சிங்கிற்குக் கடிதம் எழுதினார்.


இந்நிலையில் ஈழநேருவின் மனைவி சந்திரலீலா உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் தனது கணவர் ஒரு மோசடி வழக்கில் (20ஆம் பக்கம் பார்க்க)

## 13ஆவது சட்டத்திருத்தத்தை நிறைவேற்ற இந்தியா உறுதி

### வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)

கொழும்பில் நடக்கவுள்ள பொது நலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாட்டில் எந்த மட்டத்தில் பங்கேற்பது என்பது குறித்து இன்னும்



முடிவு செய்யப்படவில்லை என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது.

நவம்பரில் நடக்கவுள்ள பொது நலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாட்டில், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்ளக் கூடாது என்று தமிழகம் மற்றும் புதுச்சேரி மாநில முதல்வர்களும் பல்வேறு கட்சித் தலைவர்களும் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் இந்தப் பிரச்சினை குறித்து நேற்று நாடாளுமன்ற கேள்வி நேரத்தில் பதிலளித்த (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இந்திய மீனவர்கள் சிறையில் வைக்கப்பட மாட்டார்கள்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

இந்திய மீனவர்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட மாட்டார்கள் என மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். இலங்கைக் கடற்பரப்பில் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களை எதிர்காலத்தில் சிறையில் தடுத்து வைக்கப்போவதில்லை என அமைச்சர் சேனாரட்ன குறிப்பிடுள்ளார். எனினும் அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

மனிதாபிமான அடிப்படையில் இந்திய மீனவர்கள் தொடர்பில் இவ்வாறான ஓர் நடவடிக்கையை எடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். ஏற்கெனவே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவர் என தெரிவித்துள்ளார். இதேவேளை இரண்டு தரப்பினரும் கடலை பயன்படுத்தக் கூடிய வகையில் இணக்கப்பாடு காணப்பட வேண்டுமென இந்திய மீனவர்கள் கோரியிருந்தனர்.

திறந்த கடல் கொள்கையின் அடிப்படையில் கால அட்டவணைப் பிரகாரம் இந்திய - இலங்கை மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட முடியும் என யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் இந்தத்திட்டத்தை இலங்கை மீனவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. (எ-11)

# மெட்ராஸ் கபே திரைப்படத்துக்கு தடைவிதிக்க நீதிமன்றம் மறுப்பு

மெட்ராஸ் கபே திரைப்படத்திற்கு இடைக் காலத்தடை விதிக்க சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை மறுப்புத் தெரிவித்துள்ளது.

ஹிந்தி நடிகர் ஜோன் ஆபிரகாம் நடித்துள்ள மெட்ராஸ் கபே திரைப்படத்தை தடை செய்யக் கோரி மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இம்மனுவில் மொத்த தமிழ் சமூகத்தையும் அவமதிக்கும் வகையில் எடுக்கப்பட்ட இந்தக் திரைப்படத்தை பொது நன்மை கருதி தடை செய்ய வேண்டும் எனவும் இத்திரைப்படத்துக்கு தணிக்கைக் குழு வழங்கிய சான்றிதழை இரத்துச் செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இம்மனுவை விசாரணைக்கு எடுத்த நீதிபதிகள் இத்திரைப்படத்திற்கு இடைக் காலத் தடை விதிக்க மறுப்புத் தெரிவித்ததுடன் அது தொடர்பாக எதிர்வரும் 3-ம் திகதிக்குள் பதிலளிக்குமாறு மத்திய திரைப்பட தணிக்கைக் குழுவிற்கும் உத்தரவிட்டனர்.

இத்திரைப்படத்தில் விடுதலைப் புலிகளின் தகைலவர் பிரபாகரனை தீவிரவாதி போன்று சித்தரித்திருப்பதால் இத்திரைப்படத்தை திரையிடக்கூடாது என்று பல்வேறு அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

அதேவேளை இத்திரைப்படத்தை திரையிடக் கூடாது என்று வலியுறுத்தி சென்னையில் சட்டக் கல்லூரி மாணவர்கள் நேற்று வீதி மறியலில் ஈடுபட்டமையும் குறிப்பிடத்தக்கது. (எ-11)

# அடையாள அட்டை கண்டெடுப்பு

இணுவில் மேற்கு சுன்னாகத்தைச் சேர்ந்த சர்மிலா சிவஞானராசா என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (எ)

# அரசாங்கத்திற்கு எதிராக ஜப்பானில் ஆர்ப்பாட்டம்

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் மனிதப்படுகொலைகள் மற்றும் ஜனநாயக அழிவுகளுக்கு எதிராக ஜப்பானின் டோக்கியோ நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த உள்ளதாக இலங்கையின் ஜனநாயகத்திற்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது.

மீண்டும் ஒரு ரத்துபஸ்வல வேண்டாம். ராஜபக்ஷ ஆட்சியாளர்கள் படுகொலைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும்.

மாடுகளை கொலை செய்யப்படுவதை நிறுத்தும் முன்னர் மனிதர்கள் கொலை செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என அவ் அமைப்பு கோரியுள்ளது.

இலங்கையில் இம்பெறும் படுகொலைகளை உடனடியாக நிறுத்தகோரி நடத்தப்படும் பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம் இன்று நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு டோக்கியோவின் சீனகாவா தக்கனவா பொலிஸ் நிலையத்திற்கு எதிரில் ஆரம்பமாகும் பேரணி டோக்கியாவில் இலங்கை தூதரகம் நோக்கி செல்ல உள்ளது.

தூதரகம் எதிரில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என இலங்கையின் ஜனநாயகத்திற்கான அமைப்பு தெரிவித்துள்ளது. (எ-11)

# காணாமல் போன சிறுவன் சடலமாக மீட்பு!

ஓட்டமாவடி மடுவத்து வீதியில் சிறுவனொருவனின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சடலம் நேற்று பிற்பகல் 4.00 மணியளவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது .

இச் சிறுவன் அடித்து கொலை செய்யப்பட்ட நிலையில் கற்கலால் மறைத்து வைக்கப்பட்டிருந்தார்.குறித்த சடலத்தை அப்பகுதிக்கு மாடு மேய்பதற்காகச் சென்ற ஒருவர் கண்டு பொலிஸாருக்கு தகவல் தெரியப்படுத்தியுள்ளார்.

இதேவேளை செம்மண்ணோடை பாடசாலை வீதியைச் சேர்ந்த மீறா லெப்பை முஹம்மட் ஹிமாஸ் என்ற 11 வயது சிறுவனை கடந்த 17-ம் திகதியிலிருந்து காணவில்லை என 18-ம் திகதி வாழைச்சேனை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கண்டெடுக்கப்பட்ட சடலம் காணாமல் போன மீறா லெப்பை முஹம்மட் ஹமாஸடையதாக இருக்கலாம் என்று சந்தேகிப்பதாக ஆரம்பக்கட்ட விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளதாக வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)


## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்



Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

23.08.2013 முதல்27.08.2013 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

மீண்டும் யாழில்

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன்

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்)
(பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(C-4428)



மு/ வித்தியானந்த கல்லூரி முள்ளியவளை

## தொழில்நுட்ப பாடத்துறைக்கான அனுமதி

க.பொ.த உயர்தரத்தில் மேற்படி பாடநெறியினை கற்க விரும்பும் மாணவர்கள் 15.09.2013-ம் திகதிக்கு முன்னர் எமது பாடசாலையில் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளலாம்.

-அதிபர்

(சி-4427)



## வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான பருத்தித்துறை நகர வீதி மூடப்படுதல் பற்றிய அறிவித்தல்

வீதி அபிவிருத்தி அதிகாரசபை மூலம் பருத்தித்துறை நகரில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகள் காரணமாக யாழ்.-பருத்தித்துறை வீதியில் சிவன் கோவில் சந்தியில் இருந்து பஸ் நிலையம் வரை 23.08.2013 தொடக்கம் 30.08.2013 வரை மூடப்பட்டிருக்கும். இதற்கு மாற்று வழியாக சிவன் கோவில் வீதி ஊடாக சென்று தும்பளை வீதி ஊடாக 2-ம் குறுக்கு தெருவை அடைந்து பருத்தித்துறை நகரை அடையமுடியும் என்பதை அறியத்தருகின்றேன். அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமாக பொது மக்களிடமிருந்து கிடைத்துக் கொண்டிருக்கும் பாரிய அளவிலான ஒத்துழைப்பிற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் அதே வேளையில் ஒரு வாரத்திற்கான பாதை தற்காலிகமாக 600 மீற்றர் மூடப்படுவதையும் அதற்கான மாற்றுவழியை உபயோகிப்பது சம்பந்தமாகவும் அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றோம்.

**எந்திரி மோசஸ் மரியதாசன்,**
*திட்டப்பணிப்பாளர்,*
*வடக்கிற்கான வீதி புனரமைப்புத் திட்டம் (NRR P- C7),*
*வீதி அபிவிருத்தி அதிகாரசபை,*
*761, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.* (சி-4422)



## பிள்ளையார் இன்

சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும். 6 - 10 pm - 250/=
தினமும் **12 மணிமுதல் 3 மணிவரை** மிகச் சிறந்த சைவ, அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.

**சைவ உணவு: 150/-** **அசைவ உணவு 180/-**

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(சி-4414)



## ஆடுகள் தேவை

மறி ஆடுகள் விற்கவுள்ளோர் தொடர்பு கொள்ளவும்

T.P:-0777541654

(3670)



## சேல்ஸ்மன் தேவை

எமது புடைவை நிறுவனத்திற்கு அனுபவமுள்ள, பழக ஆர்வமுள்ள ஆண்கள் தேவை. நேரில் வரவும்.

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

41,பெரிய கடை, யாழ்ப்பாணம்.

(3673)






வட்டக்கச்சி - கிளிநொச்சி
ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில்

## பிரமோற்சவம் - 2013

இன்று வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவிலில் 4-ம் திருவிழா. இன்று எம் பெருமான் சேஷ வாகனத்தில் அனந்தசயனராகக் காட்சியளிக்கும் திருநாள்.

காலை 9 மணிக்கு பகல் பூசை ஆரம்பமாகி 12 மணிக்கு நிறைவுறும். மாலைத் திருவிழா 5 மணிக்கு ஆரம்பமாகி இரவு 8 மணிக்கு நிறைவுறும்.

-பரிபாலன சபையினர்

(C-4416)



வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
தொ.பே. : 021 321 0815
E-mail: valampurii@yahoo.com



## COMPUTER AND ACCESSORES SALES, 30% OFFER

| | | |
|---|---|---|
| 4GB Pendrive : 850 | Intel Mother Board : 7950 | ATX Casing Tower : 2650 |
| 8GB Pendrive : 1150 | Intel Processor 2.9GHz : 8500 | 2GB DDR III Ram : 2850 |
| 16GB Pendirve : 1750 | Intel I-3 Processr 3.3GHz : 16850 | 4GB DDR III Ram : 4950 |
| 32GB Pendrive : 3350 | 500 GB Toshiba HDD : 7550 | 500GB Laptop HDD : 7900 |
| 7.2 Multy Dongle : 2950 | 500 GB Westrn Dig HDD : 7850 | Samsung DVD Writer : 2750 |
| Laser Mouse from : 250 | 1TB Westrn Digital HDD : 10750 | 450W Power Supply : 1550 |
| Keyboard from : 480 | 19" Samsung Led Monitor: 12500 | 3in1 Sams Laser Printer: 23750 |
| Wirless Key&Mous:1850 | 19" HP Led Monitor : 12750 | P-4 3rd Gen Full Set : 48850 |
| 10MP Webcam from : 775 | 19" AOC Led Monitor : 12400 | 3rd Gen Laptop from : 55850 |
| Laptop Cooler Pad : 850 | 19" View Sonic Monitor : 12600 | 3rd Gen I-3 HP Laptop:66000 |

NORTH LEAD COMPUTER & ACCESSORIES WHOLESALER
No: 328, Stanly Road, Jaffna (ஆரியகுளம் சந்திக்கு அருகில்) Tel : 021-222 4459, 0772533390

(சி-4425)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்ப கோளாறு காரணமாகவே

# நுரைச்சோலை அனல்மின் நிலையம் மூடப்பட்டுள்ளது

தொழில்நுட்ப கோளாறு காரணமாகவே நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையம் மூடப்படுவதாக மின்சார தொழிற்சங்கங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

வருடாந்த திருத்தப் பணிகளுக்காக மின் உற்பத்தி நிலையம் மூன்று வாரங்கள் மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் ரஞ்ஜன் ஜயலால் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் வருடாந்த திருத்தப் பணிகளுக்காகவே மின்னுற்பத்தி நிலையம் மூடப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளரும் பிரதி இணைப்பதி காரியுமான செனஜித் தசநாயக்க தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே திட்டமிட்டதற்கு அமைய மின் உற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள் நாளை முதல் மூன்று வாரங்களுக்கு இடம்பெறாதென இலங்கை மின்சார சபை அண்மையில் தெரிவித்திருந்தது. (அ-2)

# மனநல பாதிப்புக்குள்ளானவர்கள் உரிய சிகிச்சை பெறுவதில்லை

## தேசிய மனநோய் நிறுவனம்

இலங்கையில் மனநல குறைபாட்டினால் பாதிக்கப்பட்டவர்களில் 60 வீதமானோர் உரிய சிகிச்சை களை பெற்று கொள்வதில்லை என தேசிய மனநோய் ஆய்வு நிறுவனம் தெரிவிக்கின்றது.

பல்வேறு சமூக ரீதியான கார ணங்களின் அடிப்படையில் மன நலம் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை களை பெற்றுக் கொள்வதில்லை என தேசிய மனநோய் ஆய்வு நிறு வனத்தின் பணிப்பாளரும் வைத்திய நிபுணருமான ஜயான் மெண் டிஸ் குறிப்பிட்டார்.

நாட்டின் சனத்தொகையில் 20 வீதமானோர் சிறு அளவிலான மன நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் 5 வீதமா னோர் கடும் பாதிப்புக்குள்ளாகி இருப்பதாகவும் ஜயான் மெண்டிஸ் கூறுகின்றார். ஒரு வர் மனநல பாதிப்புக்கு உள்ளாகியிருப்பது தெரியவரும் பட்சத் தில் உடனடி யாக அவரை சிகிச்சை களுக்கு உட்படுத்துதல் அவசியம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# மஹோற்சவகால சொற்பொழிவு

யாழ். மாவட்ட அறநெறிப் பாடசாலை ஒன்றியமும் அச்செழு மதுரை மீனாட்சி அம்மன் ஆலயமும் இணைந்து நடத்தும் மஹோற்சவகாலச் சொற்பொழிவு அச்செழு ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் கடந்த 18 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இதற்கமைய இன்று வெள்ளிக்கிழமை சைவப்புலவர் நித்திய தசீதரன் வழங்கும் ஆலய வழிபாட்டு முறைகள் எனும் விடயப் பொருளிலான சொற்பொழிவும் நாளை சனிக்கிழமை மதுரகவி காரை எம்.பி. அருளா னந்தம் வழங்கும் சர்வம் சக்திமயம் என்னும் விடயப் பொருளிலான சொற் பொழிவும் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை சைவப்புலவர் கமலநாதன் வழங்கும் திருவாசகம் என்னும் தேன் எனும் விடயப் பொருளிலான சொற்பொழிவும் எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை சைவப் புலவர் சத்தியநாதன் வழங்கும் தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவும் மறுநாள் செவ்வாய்க் கிழமை சைவப் புலவர் நித்தியதசீதரன் வழங்கும் சமய வாழ்வின் விழு மியங்கள் என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவும் இடம்பெற வுள்ளன. (அ-78)

# மொரகஹகந்த நீர்த்தேக்கத்திலிருந்து இரணைமடுவுக்கு நீர்ப்பாசனம்

(கொழும்பு)

மொரகஹகந்த நீர்த்தேக்கத்தில் இருந்து பதவியா மற்றும் இரணைமடுவுக்கான நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்த ஜனாதிபதி அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

வடமத்திய மாகாண கூட்டுறவு உணவு மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் கே.எச். நந்தசேன ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க ஜனாதிபதி மேற்படி திட்டத்துக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

இதை அடுத்து நீர்ப்பாசனத் திணைக்களம் தனது அளவை வேலைகளை ஆரம்பித்துள்ளது. இந்நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் மஹா கணந்தாரவெவ, வாகல்கட குளங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கவுள்ளது.

இந்த அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் ரத்மல்கஹவெவ மற்றும் இரணைமடுவ குளத்துக்கு நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்தவும் தாம் திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (அ-2)




வடக்கு மாகாண சபைத் தேர்தல் - யாழ் மாவட்டம்

தேசியம்
சூழலியம்
சுய நிர்ணயம்

தமிழ்த் தேசிய அரசியலில்
இன்று
ஒரு சூழலியலாளனும் தேவை.

நம்பிக்கைக்குரிய தெரிவு

பொ.ஐங்கரநேசன்
M.Sc,PGDJMC

2

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - இலங்கைத் தமிழரசுக் கட்சி

(E/4909)



வட மாகாண சபைத் தேர்தல் - 2013



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)
யாழ் மாவட்ட வேட்பாளர்

சீ.வீ.கே.சிவஞானம்

பட்டயச் செயலாளர்
ஓய்வுநிலை மாநகர ஆணையாளர்
துணைப் பொதுச்செயலாளர் - இ.த.அ.க

8

சலுகைக்கு முடிவும்
உரிமைக்கு விடிவும்!!!

(E/009)



வடமாகாண சபைத் தேர்தல் 2013



கிளிநொச்சி மாவட்டம்

1970 - 1977 வரை
தேசிய அரசுப் பேரவையில்
தந்தை செல்வாவுடன்
இருந்த அரசியல்வாதி

வீ.ஆனந்தசங்கரி

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி)

X 2

(CE-4908)



வடக்கு மாகாணசபைத் தேர்தல் - 2013

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

மாபெரும் தேர்தல் பரப்புரைக் கூட்டம்
வேட்பாளர் அறிமுக நிகழ்ச்சி

இடம் : யாழ்.வீரசிங்கம் மண்டபம்
காலம் : 25.08.2013 ஞாயிறு பி.ப 5.00 மணி
தலைமை : திரு.மாவை.சோ.சேனாதிராசா பா.உ

சிறப்பு உரைகள்

- திரு.இரா.சம்பந்தன் பா.உ
- நீதியரசர். க.வி.விக்னேஸ்வரன்
- திரு.தர்மலிங்கம் சித்தார்த்தன்
- திரு. வீ. ஆனந்தசங்கரி
- திரு.செல்வம் அடைக்கலநாதன் பா.உ
- திரு.எம்.ஏ.சுமந்திரன் பா.உ
- திரு.ந.சிறீகாந்தா
- ஜனாப். ஐயுப் அஸ்மின் (நளீமி)
- திரு.சுரேஸ் பிரேமச்சந்திரன் பா.உ
- திரு.பொன். செல்வராசா பா.உ

மற்றும் வேட்பாளர் அறிமுக உரைகளும் அதிதிகள் உரைகளும் இடம்பெறும். அலை அலையாய் அணிதிரண்டு வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதேபோல் செப்ரெம்பர் 21 அதிகாலையில் எழுந்து வந்து தமிழின விடிவுக்காய் எழுதுகோல் எடுத்து வாக்களித்து வரலாறு படையுங்கள்.

அழிந்துபோன எம் தேசத்தையும் வீழ்ந்து போன எம் சமுதாயத்தையும் மீளக் கட்டியெழுப்புவோம்.
எங்கள் வீட்டுக்கு நாம் போவோம், எம் மண்ணில் நாம் ஆளுவோம்.
வாழ்வுரிமைக்காய் போராடுவோம். சுதந்திரம் எம் பிறப்புரிமை, எம் சுயநிர்ணய உரிமையை நிலை நாட்டுவோம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி X

மாவை.எஸ்.சேனாதிராசா
பொதுச்செயலாளர், இலங்கைத் தமிழரசுக் கட்சி

ஒருங்கிணைப்புக்குழு,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மீனும் பருந்தும்

குளக்கரை ஓரமாக ஒரு ஆலமரம் நின்றது. அந்தப் பொய்கைக் கரையில் உட்கார்ந்து ஒருவர் தவம் செய்யத் தொடங்கினார். அந்த நேரம் பார்த்து அந்த ஆலமரத்திலிருந்து ஒரு பழுப்பு இலை கீழே விழுந்தது. விழுந்த இலையின் ஒரு பாதி தண்ணீரிலும் மறுபாதி தரையிலும் கிடந்தது.

தண்ணீரில் விழுந்த ஒருபாதி இலை மீனாக மாறியது! நிலத்தில் விழுந்த பாதி இலை பருந்தாக மாறியது! மீனும் பருந்தும் ஒன்றையொன்று இழுக்க ஆரம்பித்தன. இதனால் அவருடைய தவம் கலைந்து விட்டது. தவத்திலிருந்து தவறி விட்டார் என்ற குற்றத்திற்காக ஒரு பூதம் வந்து இவரைப் பிடித்துக் கொண்டு போய் சிறையில் அடைத்துவிட்டது.

அங்கே போய்ப்பார்த்தால் ஏற்கனவே 999 பேர் அங்கு இருந்தார்கள். எல்லோரும் இவர் மாதிரியே தவத்தில் தவறியவர்கள்! எல்லோரையும் பூதம்தான் பிடித்துக் கொண்டு வந்து அடைத்து வைத்திருந்தது. அந்த பூதம் என்ன நினைத்து கொண்டிருந்தது என்றால் சிறையில் 1000 பேர் சேர்ந்ததும் ஒரே படியாக எல்லோரையும் சாப்பிடலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தது! கடைசியாக அவர் வந்து சேர்ந்ததும் எண்ணிக்கை 1000 ஆகிவிட்டது. அதனால் அங்கேயிருந்த 999 பேருக்கும் இவர்மேல் எரிச்சல் வந்து விட்டது. இவரால் எல்லோருடைய உயிரு க்கும் ஆபத்து வந்தது!

அதனால் எல்லோரும் சேர்ந்து இவரிடம் சண்டைக்கு வந்தார்கள்! "நீதான் எங்களுடைய அழிவுக்குக் காரணம்!" என்று குற்றம் சாட்டினார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் கடைசியாக வந்த அவர் ஒரு நூல் எழுதினார். அந்த நூல்தான் திருமுருகாற்றுப்படை! அவர் யார் தெரியும்?

அவர்தான் நக்கீரர். அவர் பாடிய பாட்டு அவருக்கும் அவருடன் இருந்த 999 பேருக்கும் விடுதலை வாங்கிக் கொடுத்தது. இந்த கதை ஒருபக்கம் இருக்கட்டும். இப்பொழுது கருத்தை கவனிப்போம்.

பொய்கைக்கரை என்று கூறினோம் அல்லவா? அது தான் இந்த உலகம். பழுத்துப்போய் விழுந்த ஆலமரத்தின் இலை தான் இங்கே இருக்கின்ற உயிர்கள். இலை வந்து குளத்தில் விழுந்த மாதிரி இந்த உலகத்தில் நாம் வந்து விழுந்திருக்கின்றோம். இங்கே நாம் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு இரண்டுவழிகள் இங்கே காட்டப்பட்டிருக்கின்றன!

மீன் மாதிரி வாழவேண்டுமா? பருந்து மாதிரி வாழவேண்டுமா? மீனின் வாழ்க்கை தண்ணீரின் மேற்பரப்பிலேயே நீந்தி அங்கே கிடக்கும் அழுக்கை சாப்பிட்டு அப்படியே வாழ்ந்து ஒரு நாள் செத்துப்போகும். பருந்துக்கு மிக உயரத்தில் பறக்கக் கூடிய வாழ்க்கை! வாழ்க்கை உயர்ந்தது தான்... இருந்தாலும் அது மேலேயிருந்து அழுகிப்போன பிணங்கள் ஏதாவது பூமியில் கிடைக் குமா என்று தேடிக் கொண் டிருக்கும்.

மீனின் வாழ்க்கை உணர்ச்சிவயப்பட்ட வாழ்க்கை! அடித்தளம் வரைக்கும் போய் வாழ்வின் உண்மையை அனுபவிக்க தெரியாமல் ஏதோ மேலேழுந்த வாரியாக சில அழுக்கு மாதிரியான தாழ்ந்த இம்சைக ளை நிறைவு செய்துகொண்டு செத்துப் போகும் ஒரு வாழ்க்கை இது!

பருந்து வாழ்க்கை அறிவு வாழ்க்கை! ஆனால் ஆசை அதை இழிவு நிலையில் கொண்டுவந்து ஈடுபடுத்திவிடும். அறிவும் உணர்ச்சியும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு இழுக்க அதனால் ஏற்படும் போர்கள் நிறைந்த போர்க்களம்தான் இந்த உலகம்.

இந்த கருப்பொருள் நமக்கு உணர்த்தும் நீதி ஒன்று உண்டு! மீனும் பருந்தும் இணைந்த ஒரு வாழ்க்கைமுறை நமக்குத் தேவை. உலகம் என்ற இந்த பொய்கையில் வாழ வேண்டுமானால் நமக்கு நீந்தத் தெரியவேண்டும்.

உலகத்திலிருந்து ஒதுங்கி வாழாமல் தனக்கென்று எந்த விதப் பற்றும் இல்லாமல்... எதிலும் தோய்ந்து நின்று நுகர்தல் இல்லாமல் நீரின் மேற்பரப்பில் நீந்தி வாழும் மீன் மாதிரி நாம் இந்த உலக வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் அதே சமயத்தில் பருந்து வாழ்க்கை மேற்கொள்ள வேண்டும். பருந்து வாழ்க்கை ஒரு வகை யோக வாழ்க்கை.

உடல்வாழ்க்கையில் மீனாகவும் உயிர் வாழ்க்கையில் பருந்தாகவும் இருக்கிறமாதிரி நமது வாழ்க்கையை நாம் அமைத்துக் கொள்ள வேண்டும்! நம்ம ஆள் ஒருத்தர் ஜெயிலிருந்து வெளியே வந்தார்.

"என்னங்க... ஜெயிலில் இருந்த பொழுது ஏதாவது புத்தகம் எழுதினீங்களா? " என்று கேட்டேன். "எழுதினேன் சேர்... அதற்குப் பிறகு தான் வெறுங் காவல் தண்டனை யில் இருந்து கடும் காவல் தண்டனை அனுபவிக்கும்படி ஆயிற்று" என்றார்.

"என்ன புத்தகம் எழுதீனீங்க?" என்றேன். "ஜெயிலிருந்து தப்புவது எப்படி? என்பது புத்தகத்தினுடைய தலைப்பு சேர்!" என்றார்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# மத நிறுவனங்களும் சமூக ரீதியாக தமது பங்களிப்பை வழங்க வேண்டும்

## யாழ்.மாநகரசபை முதல்வர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மத நிறுவனங்கள் சமூக ரீதியாக தங்களது பங்களிப்பை செய்ய முன்வர வேண்டும். மேலும் முதியவர்கள் இளைய தலைமுறையினரை வழிப்படுத்த வேண்டுமென யாழ். மாநகர சபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கோரிக்கை விடுத்துள்ளார். யாழ்.மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழுவினால் வருடம் தோறும் வெளியிடப்படும் நல்லைக் குமரன் மலரின் 21ஆவது மலர் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக கலந்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய கால கட்டத்தில் ஒரு ஆக்கத்தை நிறைவு செய்வது என்பது மிகவும் சிரமமான விடயம். அதனை ஆக்குபவர்களுக்குத் தான் அதற்கான சவால்கள் புரியும். இந்த நிலையில் நல்லைக் குமரன் 21 ஆவது மலர் வெளியிடப்பட்டுள்ளது. அத்தோடு இம்முறை யாழ்.விருதினைப் பெற்றுள்ள அருட்தந்தை நீ.மரியசேவியர் அடிகளார் மதக் கொள்கைகளுக்கப்பால் சைவ சித்தாந்தத்தை நன்கு அறிந்து அதனுடைய வெளிப்பாடுகள் ஊடாக மத ரீதியான உண்மை களை உலகறியச் செய்த ஒரு பெரும கன். உண்மை எப்பொழுதும் அழி யாதது. இந்த வகையில் அடிகளார் நீ.மரியசேவியர் சமூகம், சமயம், மருத்துவம், கல்வி போன்ற பணிகளி னூடாகவும் கலாசாரங்களை மக்களி டையே பரப்பியவர். எமது நாட்டில் மட்டுமல்ல சர்வதேச ரீதியாகவும் பரப்புவதற்கு இந்தப் பெருமகனார் எடுத்த முயற்சிகள் அளப்பரியன.

மேலும் மத நிறுவனங்கள் சமூக ரீதியாக தமது பங்களிப்பை செய்ய வேண்டும்.

அந்த வகையில் கத்தோலிக்க யாழ்.மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையின் கைபட எழுதிய கடிதம் ஒன்று யாழ்.மாநகர சபைக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

அதில் தனியார் கல்வி நிலையங்கள் மாணவர்க ளுடைய ஆன்மீக ரீதியான செயற்பாடுகளைக் குழப்பி வருகின்றன வென்றும் யாழ். மாநகர சபை எல்லைக் குட்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் நடத்தப்படும் வகுப்புக்களை இக் காரணத்திற்காக கட்டுப்படுத்தி, சமூக ரீதியாக உதவ வேண்டுமென்றும் யதார்த்த ரீதியாக அவர் வேண்டுகோள் ஒன்றை விடுத்திருந்தார்.

அவ்வேண்டுகோளை எமது சபையும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டு பலருடனும் கலந்துரையாடி ஒரு முடிவை எடுத்தது.

அதன்படி தனியார் கல்வி நிறுவனங்கள் வெள்ளிக்கிழமைகளில் தனியார் வகுப்புக்களை நடத்தாதிருக்க வேண்டுமென தடை விதிக்கப்பட்டது.

மேலும் கலாசார ரீதியாக ஆலயங்களுக்கு சென்று வழிபடும் முறை தற்போது எமது இளைய தலைமுறையினரிடம் அருகிப் போய்விட்டது.

ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவது எப்படி எனதெரியாதபல இளைஞர்களும் நம்மிடையே உள்ளனர். எனவே, ஆன்மீக சிந்தனைகளை இளைஞர்களுக்கு வழங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு எம்மால் தனியார் வகுப்புகள் வெள்ளிக் கிழ மைகளில் நடத்ததடைவிதிக்கப்பட்டது.

இளைஞர்களை நாம் ஆன்மீக ரீதியாக வழிப்படுத்த வேண்டும். முதியவர்கள் இளையவர்களை ஆற்றுப்படுத்த வேண்டும். ஆன்மீகத்தை கட்டியெழுப்ப சகல நிறுவன ங்களும் முன்வரவேண்டுமென அவர்வேண்டுகோள் விடுத்தார். (அ-6)

## ஆரோக்கிய நாதர் திருவிழா ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தூய ஆரோக்கிய நாதர் ஆலயத் திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 6 தினங்கள் நடைபெற உள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5மணிக்கு நற்கருணைவிழாவும் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.30மணிக்கு திருவிழா திருப்பலியும் மாலை 5மணிக்கு திருச் சொரூப பவனியும் இடம்பெறும். (செ-11)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 100 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 80 | 100 |
| தக்காளி | 60 | 40 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 60 |
| கோவா | 80 | 70 | 80 | 100 |
| கரட் | 100 | 100 | 140 | 120 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 |
| புடோல் | 30 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 150 | 140-160 | 160-200 |
| பெரிய வெங்காயம் | 140 | 100 | 120 | 140 |
| பாகற்காய் | 80 | 80 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 80 | 80 |
| பயற்றங்காய் | 160 | 100 | 120 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 140 |
| பீற்றூட் | 20 | 30 | 40 | 40 |
| கறிமிளகாய் | 100 | 60 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 40 | 140 | 120 | 100 |
| போஞ்சி | 140 | 160 | 100 | 200 |
| கத்தரிதம்புள்ள | — | — | — | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 320 | 210 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 40 | 40 |
| இராசவள்ளி | 100 | 80 | 120 | 120 |

## இராசி பலன்

23.08.2013

(ஆவணி 07, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு

திருதியை பின்னிரவு 4.15 மணிவரை

பூரட்டாதி முற்பகல் 11.55 மணிவரை

இராகுகாலம் 10.35-12.05 மணிவரை

சுபநேரம் 6.05-7.35மணிவரை

**மேடம்** கொடுக்கல் வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வெளியூர் பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.

**இடபம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், புதிய நண்பர்களின் அறிமுகத்தால் பொருளாதார நிலை உருவாகும், புதிய பொருட்சேர்க்கையுண்டு, கௌரவமான நாள்

**மிதுனம்** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், தொட்டகாரியங்கள் வெற்றிபெறும், அரசு வழியில் அனுகூலமுண்டு, ஆரோக்கியமான நாள்

**கடகம்** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உடல் நலம் சீராகும், முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள்.

**சிங்கம்** விரயங்கள் தவிர்க்க இயலாமல் போகலாம், சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, போசன சுகமுண்டு, முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**கன்னி** வழிபாட்டால் முன்னேற்றம் காணவேண்டிய நாள், நட்பு வட்டம் விரிவடையும், நம்பிக்கையுடன் செயற்படுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்** பொதுநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசிச் சமாளிப்பீர்கள்.

**விருச்சிகம்** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் மேலோங்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**தனுசு** திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்ட படியே நடைபெறும், பெற்றோர் மீது பிரியம் கூடும், வாகன சுகமுண்டு, குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**மகரம்** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், வழிபாட்டால் ஆனந்தம் காண்பீர்கள்.

**கும்பம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், நல்லவர்களின் தொடர்புகள் நீடிக்கும்,உங்களின் வார்த்தைக்கு மற்றவர்கள் செவிமடுப்பர்.

**மீனம்** அமைதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், ஆழ்ந்த சிந்தையுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் வங்கியின் ஏற்பாட்டில் கருத்தரங்கு

வடமாகாணத்தைச்சேர்ந்த இலங்கை வங்கியின் சிறிய நடுத்தர தொழில் முயற்சி வாடிக்கையாளர்களுக்கு சிறிய நடுத்தர முயற்சியின் முன்னோக்கிய பார்வை எனும் தொனிப்பொருளில் கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் வடமாகாணத்தைச் சேர்ந்த இலங்கை வங்கியின் 100 வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டு பயன்பெறவுள்ளனர். (அ)

# 41 இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 41 இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளதாக யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் உதவித் துணைத்தூதுவர் தட்சணாமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தலைமன்னார் பகுதியில் அத்துமீறி மீன்பிடித் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது கடந்த மாதம் 6 ஆம் திகதி 21 இந்திய மீனவர்களும் இம் மாதம் 3ஆம் திகதி இந்திய மீனவர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அத்தோடு அவர்களிடமிருந்து 10 இந்திய இழுவைப்படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்நிலையில் கடந்த 16 ஆம் திகதி இந்த 41 இந்திய மீனவர்களும் மன்னார் நீதி மன்றில் நீதிபதி ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது நேற்று வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

இதனையடுத்து நேற்று நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட 41 இந்திய மீனவர்களையும் இம்மாதம் 29 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக துணைத்தூதரகத்தின் உதவித் துணைத்தூதுவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த 16 ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தினால் 8 இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# பொதுநலவாய உச்சி மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும்

### ஆர்ப்பாட்டத்தில் குதிக்கிறது பா.ஜ.க.

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வலியுறுத்தி நாளைய தினம் பா.ஜ.க. சார்பில் தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அக் கட்சியின் மாநிலத்தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு, எதிர்வரும் நவம்பரில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்குமாறு அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு நேரில் அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கையில் இலட்சக்கணக்கான தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டமைக்கு காரணமான அந்த நாட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தண்டனை வழங்க வேண்டும் என உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. இந்நிலையில் இலங்கையில் நடைபெறும் குறித்த மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் மற்றும் தமிழ் அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இலங்கையில் நடைபெறவுள்ள இம் மாநாட்டில் இந்தியாவின் சார்பில் எவரும் பங்கேற்கக் கூடாது. அத்தோடு குறித்த அமைப்புக்கு இலங்கை ஜனாதிபதி தலைமை வகிக்கும் வரை அதிலிருந்து இந்தியா விலகி இருக்க வேண்டும். எனவே மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்பதை வலியுறுத்தி நாளைய தினம் தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும். (அ-2)

# நாடாளுமன்ற தெரிவுக்குழு இன பிரச்சினையை தீர்க்காது

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக்குழு தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வாக அமையாது என நாடாளுமன்ற உறுப்பினரான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் அண்மையில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரச்சினையை திசை திருப்பும் நோக்கில் அரசாங்கம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பணிகளை ஆரம்பித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த காலங்களிலும் அரசாங்கம் இவ்வாறான பல்வேறு தெரிவுக் குழுக்களை நியமித்திருந்தது. எனினும் இவற்றின் மூலம் எந்தவித பயனும் ஏற்படவில்லை.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்காமைக்கான காரணத்தை அறியத்தருமாறு கட்சித் தலைவர் கூட்டத்தில் வினவப்பட்டிருந்தது.

நாட்டில் நிலவிவரும் இனப்பிரச்சினையை தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஏற்படுத்தவில்லை. எனவே இந்தப் பிரச்சினைக்கு அவர்கள் பொறுப்பாளிகளல்லர்.

நாட்டை ஆட்சி செய்த முதலாளித்துவ வர்க்கத்தின் அதிகார மோகமே பிரிவினை வாதத்தை தூண்டியது.

அரசாங்கத்தின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காகவே நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென்ற மெய்யான நோக்கமும் அவசியமும் அரசாங்கத்திற்கு கிடையாது என்று நாம் கருதுகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## அலங்கார உற்சவம்

அச்செழு மத்தி திருவருள் மிகு நாகதம்பிரான் ஸ்ரீமதுரை மீனாட்சி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெற்று வருகின்றது. இவ் உற்சவத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அம்பாளுக் கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா சங்காபிஷேகம் நடைபெற்று மாலை 5 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் திருவூஞ்சல் நிகழ்வும் இடம் பெறும். தொடர்ந்து முத்துச் சப்பரத்தில் அம்பாள்வீதியுலாவரும் காட்சி இடம்பெறும். (அ-78)


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண் மங்கல் என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?

**இதோ பாவியுங்கள்**

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

போலிகள் நடமாடுவதால் பொன்னாங்காணி தைலம் வாங்கும்போது வர்ண மூடியில் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு என்பன பொறிக்கப்பட்டுள்ளதா எனவும் பெட்டியில் ஒறிஜினல் என பொறிக்கப்பட்ட பளபளப்பான ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டுள்ளதா எனவும் பார்த்து வாங்குங்கள்.

Manufactured by:
**Sithara Products**
Puttalam Road, Chilaw
(Reg.No: 63 82)
AR/PR/No 228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2567

(சி/4413)



**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து(V)<br>நட்சத்திரம்: சதயம்1<br>கி.பா :104 செவ் 1<br>உயரம்: 5’7”<br>தகைமை/தொழில்: பட்டதாரி, MPB UK PR<br>தொ.இ:B2280 | பிறப்பு: 1984 இந்து (V)<br>நட்சத்திரம்:உத்தரம் 4<br>கி.பா :53.5 செவ் 7 உயரம்: 5’4”<br>தகைமை/தொழில்: BSc சுவீடன்<br>தொ.இ:G1088 |
| பிறப்பு: 1978 இந்து(V)<br>நட்சத்திரம்:உத்தராடம் 1<br>உயரம்: 5’4”<br>தகைமை/தொழில்: O/L வியாபாரம்<br>தொ.இ:B2287 | பிறப்பு: 1985 இந்து(V)<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா :52.75 சூ, செவ் 7<br>உயரம்: 5’1”<br>தகைமை/தொழில்: HNDA<br>தொ.இ:G1090 |
| பிறப்பு: 1982 இந்து(V)<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 3<br>உயரம்: 5’9”<br>தகைமை/தொழில்: A/Lதனியார்<br>தொ.இ:B737 | பிறப்பு: 1981 இந்து(விஸ்வகுலம்)<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா :62.75 செவ் 8<br>உயரம்: 5’2 ”<br>தகைமை/தொழில்: BScநிகழ்ச்சித் திட்ட உதவியாளர்<br>தொ.இ:G1091 |
| பிறப்பு: 1983 இந்து(V)<br>நட்சத்திரம்:திருவாதிரை 3<br>கி.பா :24.5 செவ் 12<br>உயரம்: 5’7”<br>தகைமை/தொழில்: A/Lகனடா<br>தொ.இ:B740 | பிறப்பு: 1987 இந்து(V)<br>நட்சத்திரம்:அத்தம் 4<br>கி.பா :14.5 செவ் 12<br>தகைமை/தொழில்: MBBS (Bangaladesh)<br>தொ.இ:G1095 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி






**புதிய சுவை! புதிய அனுபவம்! புதிய தொழில்நுட்பம்!**

அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100% சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அறிமுக விலையில் நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம். பெறுமதி மிக்க பரிசில்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன.

**ஷைலோ ஐஸ்கிறீம்**

No.231, Temple Road, Nallur, Jaffna.
T.P. 021 4926003

(3587)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமதி பத்திரமின்றி ஆடுகளை ஏற்றிச்சென்றவர்களுக்கு அபராதம்

(கரவெட்டி)


வல்வெட்டித்துறை பிரதேசத்தில் அனுமதிப் பத்திரமின்றி இரு மோட்டார் சைக்கிள்களில் மூன்று ஆடுகளை ஏற்றிச் சென்ற இரு வியாபாரிகளுக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தும்படி பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று முன்தினம் புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

இப் பிரதேசத்தில் சம்பவ தினத்தன்று இந்த இரு வியாபாரிகளும் இரு மோட்டார் சைக்கிள்களில் அனுமதிப் பத்திரமின்றி வியாபாரம் செய்யும் நோக்கோடு ஆடுகளை ஏற்றிச் சென்றுள்ளனர்.

இவ்வேளை, இந்த இரு வியாபாரிகளையும் சோதனையிட்ட வல்வெட்டித்துறைப் பொலிஸார் அவர்களிடம் அனுமதிப்பத்திரம் இல்லாதது கண்டு அவர்களுக்கு எதிராக வழங்கு பதிவு செய்தனர்.

இவ் வழக்கு நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்காக் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது இரு நபர்களும் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் அவர்களைக் குற்றவாளிகளாக கருதி இருவரையும் தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தும் படியும் விற்பனைக்கு கொண்டு சென்ற மூன்று ஆடுகளையும் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கும் படியும் ஒரு வியாபாரியின் மோட்டார் சைக்கிளை அவரிடமே ஒப்படைக்குமாறும் நீதவான் பணித்தார். மற்றைய நபர் ஏற்கனவே இரு தடவைகள் இத்தகைய வழக்குகளுடன் சம் பந்தப்பட்டிருந்தமை காரணமாக அவரின் வாகனத்தை நீதிமன்றில் பாரப்படுத்துமாறும் நீதவான் உத்தரவிட்டார். (அ-9-24)



ஜீ.எல்.பீரிஸ் பாகிஸ்தான் பயணம்

# திருட்டு மின்சாரம் பெற்ற பெண்ணுக்கு அபராதம்

(கரவெட்டி)

வல்வெட்டித்துறை பிரசேத்தில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றதாக குற்றம் சாட்டப்பட்ட பெண்ணொருவரை நட்டஈடாக 43 ஆயிரத்து 920 ரூபாவை சுன்னாகம் மின்சார சபைக்கு செலுத்துமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.

இப் பிரதேசத்தில் சம்பவதினம் இப் பெண் தனது வீடுக்கு சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்றதாக மின்சாரசபை அதிகாரிகளால் குற்றம் சாட்டப்பட்டு அவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது.

வழக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதவான் அப் பெண் குற்றத்தை ஒப்புக் கொண்ட தன் அடிப்படையில் அவரை குற்றவாளியாகக் கண்டு நீதிமன்றத்திற்கு அபராதமாக 15 ஆயிரம் ரூபாவும் சுன்னாக மின்சார சபைக்கு நட்டஈடாக 43 ஆயிரத்து 920 ரூபாவும் செலுத்துமாறும் செலுத்திய பற்றுச்சீட்டை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 13' ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார்.(அ-9-24)




# மஹோற்சவத்தை முன்னிட்டு வீதிகள் புனரமைப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் மஹோற்சவத்தை முன்னிட்டு, வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய, நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படாது சேதமடைந்திருந்த துன்னாலை வல்லிபுரம் வீதி, புலோலி வைத்தியசாலை வல்லிபுரம் வீதி ஆகிய வீதிகளே புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

சுமார் 2 1/2 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இரு வீதிகளினதும் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருவதனால் புனரமைப்பு பணிகள் வல்லிபுர ஆலய மஹோசவத்திற்கு முன்னர் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆலய நிர்வாகத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க வடமாகாண வீதி அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் ரி.சிவராஜலிங்கம் மேற்படி வீதிகளின் புனரமைப்பிற்கு ஏற்பாடு செய்துள்ளார். (அ-9-10)

# சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் 24 மணிநேர சேவையில்

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸை சேர்ந்தவர்கள் நல்லூர் கந்தன் ஆலயத்தில் 24 மணிநேர சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

ஆலயத்தின் மேற்குப் பகுதியில் செ்ன். ஜோன்ஸ் அம்புலன்ஸின் பணிமனை அமைந்துள்ளது.

ஆலயத்திற்கு வருகை தருகின்ற அடியார்களின் தேவைகளுக்காக இத் தொண்டர்கள் 24 மணிநேர சேவையில் ஈடுபட்டுவருகின்றனர் என தலைமை அதிகாரி எஸ்.செல்வரஞ்சன் தெரிவித்தார்.

ஆலயத்திற்கு வருகை தரும் அடியவர்களுக்கு திடீர் சுகயீனம் ஏற்படும் பட்சத்தில் அவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்கு 24 மணிநேரமும் அம்புலன்ஸ் வாகனமும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதனைவிட காயங்கள் ஏற்படின் முதலுதவி வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செ்ன். ஜோன்ஸ் அம்புலன்ஸினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச் சேவையில் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களும் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் தலைமை அதிகாரி தெரிவித்தார். (அ்-4)

# மேய்ச்சலுக்காக செல்லும் கால்நடைகள் மீண்டும் வீட்டுக்கு திரும்புவதில்லை

(கரணவாய்)

கரவெட்டி, மத்தணி, துன்னாலை தெற்கு, துன்னாலை கிழக்கு ஆகிய பிரதேசங்களிலிருந்து மேய்ச்சலுக்காக செல்லும் கால்நடைகள் மீண்டும் வீடுகளுக்குத் திரும்புவதில்லை என கால்நடை வளர்ப்போர் கவலை வெளியிட்டுள்ளனர்.

இப் பிரதேசங்களில் வளர்க்கப்படும் கால்நடைகளை அவற்றின் உரிமையாளர்கள் மேய்ச்சலுக்காக காலையில் வெளியே அனுப்பி விடுகின்றனர்.

இப்படிச் செல்லும் கால்நடைகள் மேய்ச்சலுக்காக முள்ளி, சோணப் கரந்து போன்ற பகுதிகளுக்கு செல்கின்றன.

ஆயினும் இவை மேய்ச்சலின் பின்னர் வீடுகளுக்குத் திரும்பிவருவதில்லை எனவும் தேடிப் பார்த்தாலும் அவை கிடைப்பதில்லையெனவும் உரிமையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறாக சுமார் 50 மாடுகளும், 30 ஆடுகளும் இதுவரையில் காணாமற் போயுள்ளதாகவும் இது விடயம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்திலும் கரவெட்டி பிரதேசத்திற்குட்பட்ட கிராம சேவகர்களிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதென அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-9-60)

## உரம் வழங்குவதற்கான மீளாய்வு பதிவுகள்

மறவன்புலோ கமக்கார அமைப்புக்குட் பட்ட விவசாயிகளுக்கு உரம் வழங்குவதற்கான மீளாய்வு பதிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கமைய, மேற்படி கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகள் உரத்தைப் பெற்றுக் கொள்ள நாளை சனிக்கிழமை முதல் எதிர் வரும் 31 ஆம் திகதி வரை மறவன்புலோ பொது நோக்கு மண்டபத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

தற்போது பெரும்போகச் செய்கைக் காலம் நெருங்கியுள்ளதால் விவசாயிகள் பதிவுகளை விரைவாக மேற்கொள்வதன் மூலம் உரங்களைக் குறித்த காலத்திற்குள் வழங்கமுடியும் என மறவன்புலோ கமக்கார அமைப்பின் தலைவர் சி.திருஞானசம்பந்தர் அறிவித்துள்ளார். (அ-9-37)





512 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில், யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியேறிய முஸ்லிம் மக்களுக்கு அண்மையில் யாழ்.நாவாந்துறை பகுதியில் வைத்து வீடுகள் அமைப்பதற்கான கட்டடப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் 51 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் டி.பி.அபேயநாயக்க மற்றும் 512 ஆவது படைப்பிரிவின் பொறுப்பதிகாரி கேணல் அஜித் பல்லேவல ஆகியோர் இணைந்து பொருட்களை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலய சூழலில்...

நல்லூர் முருகன் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு உற்சவ காலத்தில் தினமும் மாலை 6.45 மணி முதல் 8.15 மணி வரை நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இதன்படி இன்று வெள்ளிக்கிழமை திருமதி குமுதா உமாகாந்தன் வழங்கும் பாடலுடனான இசையரங்கம் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்விற்கு அணி செய் கலைஞர்களாக வயலின் கே.பத்மநாதன், மிருதங்கம் எஸ்.துரைராசா, கடம் எ.செல்வரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சிந்தனை, சமய சொற்பொழிவு, கலை நிகழ்வுகள் என்பன உற்சவகாலத்தில் தினமும் பிற்பகல் 3 மணி முதல் 6 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இன்றைய நிகழ்வுகளாக சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் வழங்கும் **அலங்காரம் பாடி அழகனைத் தொழுவோம்** என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. தொடர்ந்து சண்டிலிப்பாய் சேக்கிழார் அறநெறிப்பாடசாலை, இணுவில் இளந் தொண்டர் சபை அறநெறிப்பாடசாலை, நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் தெய்வீகப் பேருரைகளும், கலை நிகழ்வுகளும், மாணவர் சொற்பொழிவு, கலைஞர் கௌரவிப்பு நிகழ்வுகள் மஹோற்சவ காலங்களில் தினமும் மாலை 6.30 மணி முதல் இரவு 8 மணி வரை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடைபெறும். இதன்படி இன்று வெள்ளிக்கிழமை கலாநிதி மா.வேதநாதன் வழங்கும் **முருக வழிபாடு** என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் ப்ரம்மகான சபா நடத்தும் தெய்வீக இசைச்சங்கம நிகழ்வு தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன புதிய மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இதன்படி இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ விஜயகுமார சர்மா, வச்சாவதித சர்மா தேவசேனா வழங்கும் பாட்டுக் கச்சேரி இடம்பெறும்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நல்லைக் குருமணியின் பிரதமவாரிசு கானகதாவாரிதி, பிரம்ம ஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா பக்கவாத்திய சகிதம் இன்று வெள்ளிக்கிழமை **பாண்டவர் ஜனனம்** எனும் விடயப் பொருளிலான இசைப் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

# மதம் என்பது கடவுளை அடைவதற்கான மார்க்கமே!

## யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மதம் என்பது கடவுளை அடைவதற்கான மார்க்கமே என்பதை யாழ்.மாநகர சபையின் யாழ். விருது வழங்கும் நிகழ்வு சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றது என யாழ்.பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகர சபையின் சைவ சமய விவகாரக்குழுவினால் வருடம் தோறும் வெளியிடப்படும் நல்லைக் குமரன் 21 ஆவது மலர் வெளியீடு நேற்று முன்தினம் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

அத்துடன் திருமறைக் கலாமன்றத்தின் இயக்குநர் அருட்தந்தை நீ.மரியசேவியர் அடிகளாருக்கு யாழ். விருதும் பொற்கிழியும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய காலகட்டத்தில் நாம் அனைவரும் எங்கே போவது என்பது தெரியாது பலர் சொல்வதைக் கேட்டு எமக்கே ஒரு வழிதெரியாத திசையை நோக்கி போய்க் கொண்டு இருக்கின்றோம்.

எது சரி? எது பிழை? என்பதைக் கூட தெரிந்து கொள்ளாது வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். திருநீறு அணிவதில்கூட எமக்குள் மாறுபாடான கருத்து உண்டு. ஒருவர் ஒற்றை விரலினால் அணிவதுதான் சரியென்பார். இன்னொருவர் மூன்று விரல்களினால்அணிவதுதான்சரியென்பார்.

இவ்வாறு ஒவ்வொரு சிறிய சிறிய விடயங்களில்கூட எங்களில் பலருக்கு நாங்கள் செய்வது சரியானதா என்பது தெரிவதில்லை.

இவ்வாறான சூழ்நிலையில் நல்லைக் குமரன் நூல் பல நல்ல விடயங்களை உள்ளடக்கி வெளிவருகின்றமை வரவேற்கக்கூடிய விடயமாகும்.

பல்கலைக்கழகத்தில் ஆசிரியர்களாக இருக்கின்ற ஒருவர் கூட ஒரு நூலை எழுதி வெளியிடுவது மிக மிக கஷ்டமான விடயம்.

அதிலும் பலருடைய ஆக்கங்களை பெற்று அதை ஒழுங்குபடுத்தி, உரிய முறையில் நெறிப்படுத்தி, அதைப் புத்தகமாக்குவது மிகமிக கஷ்டமான விடயம்.

அந்த வகையில் நல்லைக்குமரன் நூலின் பதிப்பாசிரியர் தனது கடமையை சரிவரச் செய்துள்ளமை பாராட்டத்தக்கதான விடயம்.

மதம் என்பது கடவுளை அடைவதற்கான மார்க்கமே. அதை இன்று இந்த நிகழ்வு சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றது.

இத்தகைய நிகழ்வுகளை அவர்கள் மேலும் முன்னெடுக்க வேண்டுமென இறைவனை வேண்டிக் கொள்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# குப்பை ஏற்றிச் செல்லும் வாகனமாக அரசாங்கம்

## கயந்த எம்.பி.கிண்டல்

பிரதேச அரசியல்வாதிகள் முதல் உயர்மட்ட அரசியல்வாதிகள் வரை மேற்கொள்ளும் சட்டவிரோத செயற்பாடுகளை நிறுத்தாமையாலும் பிரதேச ரீதியில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்காமையாலும் அரசாங்கம் தற்போது நகர சபையின் குப்பை ஏற்றிச் செல்லும் வாகனமாக மாறியுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் கயந்த கருணா திலக்க தெரிவித்தார்.


கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதேச அரசியல்வாதிகள் உடனுக்குடன் தீர்க்கக் கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதில்லை என்பதாலேயே ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு செயலாளர் தலையிடும் அளவுக்கு பிரச்சினை பெரிதாகி விடுகிறது. இதனைத் தவிர அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாட்டின் பிரச்சினைகளை மறந்து விட்டு தமது உறவினர்களை அரசியலுக்கு கொண்டுவருவதில் நாட்டம் செலுத்துவதால் நாட்டின் பல பிரச்சினைகளு க்கு தீர்வு கிடைப்பதில்லை. இந்த விதமாக மக்களின் பிரச் சினைகளைத் தீர்க்க கீழ் மட்டத்தில் இருந்து உயர் மட்டம் வரையுள்ள அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுக்காதுவிடின் மக்களால் மேற்கொள் ளப்படும் அரச விரோத நடவடிக்கை கள் குறையப் போவதில்லை.

நாட்டின் தலைவர், பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நடவடிக்கைகளை எடுக்காத காரணத்தினால் சகல பிரச்சினைகளும் ஒன்று சேர்ந்து பெரும் குப்பை கூழங்களாக மாறியுள்ளன. இதனால் தற்போதைய அரசாங்கம் நகர சபையின் குப்பை வண்டியின் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது என்றார். (அ-2)

# நல்லூரான் திருவடிக்கு பன்னிரெண்டாம் திருவிழா



# சூர்பகை போக்கு!

செப்பரிய இலங்கும் நல்லைக் குமரன் இவன்
ஒப்பரிய புகழ்பாடும் அவன் திருவருள்–வெப்புற
விளங்கும் நின் திருக்கைவேல் தாங்கி வந்து
அளவிலாத எம் சூர்பகை போக்கு.

எஸ்.நதிபரன்
நல்லூர்.

# மக்கள் நலம் காத்திடு

அகத்திய முனிவருக்கு அன்புத் தமிழை
செகத்தோர் அறியச் செப்பிய கோவே
சுந்தரத் தமிழ் வேலவனே
சுந்தர வடிவுடைய சுப்பிரமணியனே
மயிலோடு சேவலும் வள்ளி தெய்வயானையுடன்
மக்கள் நலம் காத்திட வலம் வந்து
தரிசனம் தந்திடப்பா முத்துக் குமரா.

வ.பவளகேசி,
கொய்யாத்தோட்டம்.

# குமரனே! தீர்வினை காட்டு!

அலங்காரக் கந்தாவுன் திருக்கோலங் காண
ஆயிரங் கண்வேண்டும் ஐயா
விலங்காக நாளும் வீதியில் மாளும்
விதிமாற வேண்டுமே ஐயா
நலங்காக்கும் நல்லை நாதனே உன்னை
நாடினோம் நல்வழி காட்டு–தமிழ்க்
குலங்காக்க வேண்டி கூப்பினோம் உன்னைக்
குமரனே தீர்வினைக் காட்டு!

கவிஞர் நயினை இராகுலன்.

# திருவேல் எமைக்காக்கும்

நல்லைநகர் அழகனுக்கு திருவிழா
நகரெங்கும் ஒலித்திடுமே இசைவிழா
பக்தி வெள்ளம் பாய்ந்திடவே பேருரைகள்
முக்திதர வேண்டி நிற்கும் அருளுரைகள்

வீதியெங்கும் தோரணங்கள் தேவஉலகாக்கும்
பாடிடும் புகழ்கானம் மனதிற்கு இசைவாக்கும்
பழுதில்லா பூசைகள் மரபிற்கு உரையாகும்
நல்லை முருகனின் திருவேல் நிதமும் எமைக்காக்கும்.

திருமதி. மகேந்திரா இளங்கோ
யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

# நல்லூர் கந்தன் அநுபூதி

துளைபட் டெமுளம் துடித்தா டிடுதே
களைபட் டுடலம் கடிபட் டிடுதே
இழைபட் டெமையா ளகலும் துயரும்
குழைபட் டெழுசூழ் குகநல் லூரா!

கலாபூஷணம், சந்தக் கவிஞர். நவ.பாலகோபால்

அமெரிக்கன் வோட்டர்
E.S.P நாகரத்தினம் அன் கோ
52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021 222 3096




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்பாதம்



ஆன்மீகம் 94

...சிந்திக்கத் தெரிந்தவரை மனிதன் மிருகங்களைப் போல் நிர்வாணமாகத்தான் திரிந்தான். ஆனால், என்று அவன் தன் நிர்வாணத்தை உணர்ந்து நாணம் கொண்டானோ? அந்த நாணத்தின் காரணமாக உடையால் தன் உடலை மறைக்கக் கற்றுக்கொண்டானோ அன்றே அவன் இயற்கையிலிருந்து விலகத் துவங்கினான். தெய்வநிலை மாறி மனிதன் ஆனான். அவன் மேலும் மேலும் சிந்திக்க சிந்திக்க அவனுக்கும் இயற்கைக்கும் இடைவெளி அகன்று போகலாயிற்று.

துறவுநிலை உடையில் இல்லை! உள்ளத்தில்தான் இருக்கிறது. இதனால்தான் மனமது செம்மையானால் மந்திரங்கள் ஜெபிக்க வேண்டா! என்று தத்துவம் பிறந்தது. இயற்கையை விட்டு செயற்கையை செம்மைப் படுத்திய மனிதன் இன்று அந்த செயற்கைக்கே அடிமையாகிக் கிடக்கிறான். ஆதிபரம்பொருளை மறந்துவிட்டு அழியும் பொருளைத் தேடி அலைகிறான். சந்யாசிநிலையில் திம்பார் நிலை ஒருநிலை!இதை சமணர்கள்தான் அதிகமாக மேற்கொண்டார்கள். புத்தர்கூட மகா நிர்வாணம் என்ற ஒரு நிலையை கூறுகிறார். பல நேரங்களில் சித்தர்களைத் தெருவில் திரியும் பைத்தியங்களாக உலகம் நினைப்பது உண்டு! அவர்களை அடித்து விரட்டுவதுமுண்டு! இதனால்தான் சித்தர்கள் ரிஷிகள் தவசிகள் முனிவர்கள் மக்களை விட்டு மலைக்குகைகளைத் தஞ்சம் புகுந்தனர். ராஜா வேஷம் போடுகிறவன் அந்நாடாகத்திலேயே ஒருமாறு வேடத்தில் வரும்போது ரசிகர்களுக்கு நகைச்சுவையை அளிக்கும் போது ரசிகர்கள் அதைக்கண்டு சிரிப்பதில்லையா? அதைப்போலதான் உன் செயலும் அதன் பயனும். கதைக்காக நடிப்பவன் மனிதன். விதியின் படி நடக்க வேண்டியவன். நாடகமே உலகம். நாம் எல்லாம் நடிகர்கள்தானே! ஆதலால் நீ உன் வழியே போ! மற்றவர்களைப் பற்றிக் கவனத் செலுத்தாதே! கையில் கிடைத்த பொக்கிஷத்தைக் கவனமாக வைத்துக் கொள். சிறுபிள்ளை போல் வேடிக்கை பார்த்தால் கையில் உள்ளது களவுதான் போகும் என்று கூறிவிட்டு எழுந்து நடக்கத் துவங்கினார். இரவுநேரம் மாலை நேரத்தை வேமாக விரட்டிக்கொண்டிருந்தது!

அன்று இரவு உணவருந்தியபின் வழக்கம் போல்- விறகுகளால் தீ மூட்டி அந்த யாகத்தினைச் சுற்றி எல்லோரும் படுத்துறங்கினோம். உறங்கிக் கொண்டிருந்த என் செவிகளில் ஏதோ மந்திரங்களின் ஓசை எழுந்தது. அதைத் தொடர்ந்து ராஜா! ராஜா என்று என்னை யாரோ அழைக்கும் ஒலியும் சேர்ந்து கேட்டது. என் உறக்கம் கலைந்து எழுந்தமார்ந்தேன். என் கைக் கடிகாரம் இரவு மணி பதினொன்று எனக் காட்டியது. சித்தர் பெருமான் படுக்கை காலியாக இருந்தது. உடன் வந்த மற்ற அன்பர்கள்- அசதியில் ஆழ்ந்த உறக்கத்தில் அசைவற்ற நிலையில் எழுந்தேன்! சுற்றியும் கடும் இருள். ஏதோ ஒரு மிருகத்தின் உறுமல் ஒலி சற்று தொலைவில் கேட்டது. எங்கோ நரி ஊளையிடும் சப்தம்- காற்றில் மிதந்து வந்தது. அவ்வப்போது சில பறவைகள் ஒலி அதோடு குடுகுடுப்புக்காரன் ஒலிப்பது போல் ஒரு பயங்கரமான சத்தம் அந்த இருளைக் கிழித்துக்கொண்டு மிகவும் நெருக்கத்தில் தொடர்ந்து கேட்டது. மலைக்காற்று சற்றுப் பலமாக வீசியது. என் உடல் சிலிர்த்தது! இந்த இருட்டில் ஆசான் எங்கு போயிருப்பார். எனக்கு விடை கிடைக்கவில்லை. என்று தேடிப் பார்க்கலாம் என்றால் அமாவாசை இருட்டில் அதுவும் மலைக்காட்டில் வழிதெரியாமல் எப்படிப்போவது? தேடுவது? அதோடு பகல் நேரத்தில் நாங்கள் தங்கியிருந்த பகுதிக்கருகில் காணப்பட்ட அதலபாதாளத்தில் தெரிந்த பள்ளத்தாக்குகள் என் நினைவுக்கு வந்து மேலும் அச்சுறுத்தின. அடுத்து என்ன?



தாய்பாதத்தில் அன்னை சித்தர்

தொடரும்

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

# தமிழ் தனி ஈழ அரசு என்ற தீர்வுக்கு மாற்று...?

## 13- வது திருத்தம்

இலங்கை அரசின் அரசியலமைப்புச் சட்டம் அந்த நாட்டின் அரசின் தன்மையை திட்டவட்டமாக வரையறுத்துள்ளது. எவ்வாறெனில் இலங்கை அரசு ஓர் ஒன்றிய அரசு என்று தெளிவாக அதன் உறுப்பு-2 கூறுகிறது. அதாவது அந்நாட்டில் ஓர் அரசு மட்டுமே உள்ளது என்று கூட்டாட்சி நாட்டில் இருப்பது போன்று இரு அரசுகள் கொண்ட அரசமைப்பு



அல்ல என்று தெரிவிக்கிறது. 13-வது திருத்தத்திற்குப் பிறகும் அந்த கூறு- 2 இல் எந்த திருத்தமும் செய்யப்படவில்லை. இது ஒன்றே அத் திருத்தத்தின்படி அமைக்கப்படும் மாகாண ஆட்சிமுறை என்பது ஒரு கூட்டாட்சி நாட்டின் மாநில அரசுரிமைக்கு இணையான ஒன்றல்ல என்பதை தெளிவாக காட்டுகிறது அல்லவா?

மற்ற சிங்கள மாகாணங்களுக்கு வழங்கப்படும் அதே அதிகாரங்கள் தான், தமிழ் மாகாணங்களுக்கும் வழங்கப்பட்டுள்ள. தமிழர்களைத் தவிர்த்து இலங்கை மக்களில் எந்த பிரிவினரும் தங்களது நில, மொழி, பொருளாதார, பண்பாட்டு நலன்களை பாதுகாக்க வேண்டி எந்த தன்னாட்சி அரசியல் உரிமையினையும் ஒரு போதும் கோரியிருக்கவில்லையே. எனவே, சிங்களவர்களைக்கொண்ட ஒரு ஆட்சிப்பரப்பிற்கு வழங்கப்படும் அதிகாரங்களைத்தான் ஈழத்தமிழர்களுக்கு வழங்குவதற்கு மேற்படி திருத்தத்தின் படியான மாகாண ஆட்சி வழிவகுத்துள்ளது. இதனை எவ்வாறு ஒரு தன்னாட்சி உரிமையை வழங்கும் கூட்டாட்சி ஏற்பாடு என்று கூற முடியும்? அதை ஒரு நிர்வாக ஏற்பாடு என்றுதான் கூற முடியும். அந்த நிர்வாக ஏற்பாட்டை ஓர் இனத்து மக்களின் இன்றியமையா கூட்டுரிமைகளைப் பாதுகாக்கும் தன்னாட்சி ஏற்பாடாக கூறுவது என்பது வெகுமக்களின் அரசியல் அறியாமையினைப் பயன்படுத்தும் தந்திரமல்லவா?

இதனைத்தான் சிங்கள அரசின் கோயல்ஸ் பணியினை இன்றுவரை சலிக்காமல் செய்துவரும் இந்து ஏடு ஈழமக்களுக்கான அரசியல் தீர்வாக தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகின்றது. வடக்கு மாகாணத்திற்கு உடனே தேர்தல் நடத்துவதுதான் முதன்மையான பணி என்று இந்து ஏடு தொடர்ந்த பிரச்சாரம் செய்து வந்துள்ளது. இத்துடன் இணைத்து கவனிக்கத்தக்கது.

அந்நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தின் அத்தியாயம்-2 பௌத்த மதத்திற்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. அதில். அம்மதத்திற்கு அக்குடியரசு முதன்மை முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்று கூறுகிறது. அந்த அத்தியாயத்தை மேலோட்டமாகப் பார்த்தால் அதன் சூழ்ச்சி தெரியாது. ஆனால், உண்மையில் நிலவும் நடைமுறையை பொருத்திப் பார்த்தால்தான் அது ஒரு மத மற்றும் இனவாத அரசினை உருவாக்கியுள்ளது தெரியவரும். எப்படியெனில், அங்குள்ள சிங்களவர்கள்தான் பௌத்த மதத்திலுள்ளனர்.

தமிழர்கள் யாரும் பௌத்த மதத்தில் இல்லை. இந்நிலையில் பௌத்த மதத்திற்கு அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள முக்கியத்துவத்தின்படி செய்யப்படும் அரசு நடவடிக்கை எந்தவொன்றும் சிங்களவர்களுக்குத்தானே பயனளிப்பதாக இருக்கும்? இதன்படிதான் தற்போது தமிழர் நிலப்பரப்பில் நிலங்கள் இலங்கை அரசால் கையகப்பட்டுள்ள பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன. இதனால் எந்த தமிழர் பயனடைவர்? இது சிங்களவர்களுக்கு மாத்திரம் அல்லாமல் எல்லோருக்கும் பயனளிக்கும் என்று கூறினால் அதை எவர் நம்புவர்?

### இலங்கை ஒருமைப்பாட்டை வலியுறுத்துபவர்கள் யார்?

இலங்கை அரசை ஒரு தீர்வுக்கு ஒப்புக்கொள்ளச் செய்யமுடியும் என்று கூறுபவர்கள் உண்மையில் ஈழத்தமிழருக்கு ஒரு நியாயமாக தீர்வினை பெற்றுத்தர வேண்டும் என்ற நல்ல நோக்கில் அதைக் கூறுவதில்லை. மாறாக அத்தகைய ஒரு தீர்வை ஏற்றுக்கொள்ள இலங்கை அரசு ஏதோ தயாராக இருந்தது போன்றும் இப்பொழுதும் இருப்பது போன்றும் அதன்மூலம் ஓர் அரசியல் திர்வை அந்த அரசு விரும்புவது போன்றும் அந்த அரசுக்கு ஒரு நல்ல தோற்றம் காட்டும் நோக்கம் கொண்டதாகும். அவ்வாறு இல்லாவிடில் உண்மையில் 60 ஆண்டுகளுக்கும் மேலாக எந்த ஒரு அரசியல் தீர்வுக்கும் முன்வராமல் இருந்து வருவதுடன் அதன் மூலம் அதே காலத்தில் ஈழ மக்களைத் தொடர்ந்து ஒடுக்கியும் அழித்தும் இனப்படுகொலை செய்து வருகின்ற உண்மையையும் சேர்ந்து ஒப்புக் கொண்டதாகிவிடும் அல்லவா?

இதற்குள் அடங்கியுள்ள மற்றொரு முக்கிய நோக்கம், ஒன்றுபட்ட இலங்கை என்பதை காப்பாற்றுளவதாகும். எவ்வளவு நீண்ட காலத்திற்கும் ஈழத்தமிழர் பிரச்சினையில் எந்த அரசியல் தீர்வும் ஏற்படவில்லையெனினும் பரவாயில்லை. அதனால் எத்தகைய இனப் படுகொலைக்கு ஈழத்தமிழர் , உள்ளாக்கப்பட்டாலும் பரவாயில்லை. அவற்றையெல்லாம் கணக்கில் கொள்ளாமல் ஒன்றுபட்ட இலங்கைக்குள்தான் தீர்வுகாண வேண்டுமென்று கூறுவது பெரும்பான்மை இனத்தினர் என்று அடிப்படையில் இலங்கை அரசின் முழு அதிகாரங்களையும் கைப்பற்றி அவற்றை தங்கள் இனநலனுக்கு மட்டுமே உகந்தவாறு தமிழ் இனத்தினரை அழிக்கவும் பயன்படுத்தி வரும் சிங்கள இனத்தை ஆதரிக்கும் நடத்தை அல்லாமல் வேறு என்ன?

தொடரும்

ஆய்வாளர் சு. அருணாச்சலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அடை காப்பது யார்?



மகிழ்ந்த குரு, "மூடா! எழுந்திரு. குறைந்த விலைக்குக் குதிரை எங்கே கிடைக்கிறது?" என்று வியப்புடன் கேட்டார்.

மூடனின் குரல்கேட்டு மற்ற சீடர்களும் அங்கு வந்தார்கள்.

"குருவே! மாட்டைத் தேடி நான் காட்டிற்குள் சென்றேன். அங்கே ஒரு தோட்டத்தில் பல குதிரைகள் மேய்ந்து கொண்டிருந்தன. நிறைய குதிரை முட்டைகள் அங்கே இருந்தன.

அங்கிருந்த தோட்டக்காரனிடம் "ஒரு குதிரை முட்டை என்ன விலை?" என்று கேட்டேன். "ஐந்து பணம்" என்றான். உங்கள் பெயரைச் சொன்னேன். மூன்று பணத்திற்குத் தர ஒப்புக்கொண்டான்" என்றான் அவன்.

"திறமையாக விலை பேசி வந்துள்ளாய். அந்தக் குதிரை முட்டைகள் எப்படி இருந்தன?" என்று ஆர்வத்துடன் கேட்டார் அவர்.

"குருவே! ஒவ்வொரு முட்டையும் நம் தலையை விடப் பெரிதாக இருந்தது. மேல் பகுதி முழுமையும் சாம்பல் நிறமாகக் காட்சி தந்தது. என் ஒருவனால் அதைத் தூக்கி வர முடியாது.

ஒரு மாதம் அடைகாத்தால் போதும். குதிரைக் குட்டி வெளியே வரும்" என்றான் அவன்.

அங்கிருந்த மிலேச்சன், "அந்த முட்டையை ஒருமாதம் அடைகாக்க வேண்டுமே. யார் அடைகாப்பது?" என்று கேட்டான்.

"ஒரு மாதம் தானே. நம்ம மடையன் அடைகாப்பான்" என்றார் குரு.

குறுக்கிட்ட மடையன், "குருவே! மடத்தில் சமையல் வேலைகளைச் செய்பவன் நான் என்னால் எப்படி அடைகாக்க முடியும்?" என்று கேட்டான்.

"நீ வேண்டாம். பேதை அடைகாப்பான்" என்றார் அவர்.

"குருவே! மாடுகளை மேய்க்கச் செல்பவன் நான். என்னால் எப்படி ஒரே இடத்திலிருந்து அடைகாக்க முடியும்?" என்று கேட்டான் பேதை.

இப்படியே மற்ற சீடர்களும் அடை காக்கும் பொறுப்பை மறுத்தார்கள்.

என்ன செய்வது என்று சிந்தித்தார் அவர்.

"சீடர்களே! உங்கள் எல்லோருக்கும் மடத்தில் நிறைய வேலை உள்ளது. இங்கே வேலை இல்லாமல் ஒய்வாக இருப்பவன் நான்தான்.

நானே குதிரை முட்டையை மடியில் வைத்து அடைகாக்கிறேன். ஒரு மாதம் துன்பப்பட்டால் குதிரைக்குட்டி வந்துவிடும். இரண்டு ஆண்டுகளில் அது பெரிய குதிரையாகிவிடும்" என்றார்.

இதைக் [illegible] மகிழ்ச்சி அடைந்தான்.

மூடனிடம் அவன் நான்கு பணத்தைத் தந்தார். "குதிரை முட்டைக்கு மூன்று பணம். வழிச் செலவிற்கு ஒரு பணம்" என்றார்.

"மட்டி நீயும் இவனுக்குத் துணையாகச் செல். குதிரை முட்டையை இருவரும் கவனமாகத் தூக்கி வாருங்கள்" என்றார்.

அவர்கள் இருவரும் குருவை வணங்கிப் புறப்பட்டார்கள். இரண்டு நாட்கள் நடந்து அந்தத் தோட்டத்தை அடைந்தார்கள். அங்கே ஒரு குதிரை முட்டையும் இல்லை.

இதைக் கண்ட மூடன் அதிர்ச்சி அடைந்தான்.

கோபத்துடன் அவன் தோட்டக்காரனிடம், "ஒரு குதிரை முட்டையை மூன்று பணத்திற்குத் தருகிறேன் என்றாய். பணத்துடன் வருகிறேன் என்று சொல்லிவிட்டுச் சென்றேன். ஏன் அதற்குள் எல்லாக் குதிரை முட்டைகளையும் விற்றுவிட்டாய்" என்று கத்தினான்.

மட்டியும், "ஐயா! இரண்டு நாட்களாக நாங்கள் எதுவும் சாப்பிடவில்லை. குதிரை முட்டையை வாங்குவதற்காக ஓடோடி வந்தோம். எல்லா முட்டைகளையும் விற்றுவிட்டீர்களே. குருவின் முகத்தில் நாங்கள் எப்படி விழிப்போம்," என்று புலம்பினான்.

[illegible] இருவருமே முட்[illegible] என்று நினைத்தான் தோட்டக்காரன்.

"நான் என்ன செய்வேன்? பண்ணையார் இங்கு வந்தார். ஒரு குதிரை முட்டைக்குப் பத்துப் பணம் தந்தார். எல்லா முட்டைகளையும் வாங்கிச் சென்றுவிட்டார்" என்றான்.

"எங்களை இப்படி ஏமாற்றிவிட்டீரே. குதிரை முட்டை இல்லாமல் நாங்கள் எப்படி வெறுங்கையோடு போவோம்? இங்கேயே இறந்துவிடுவோம்" என்று அழுதான் மூடன்.

சமையலுக்காக வைத்திருந்த பூசணிக்காயின் நினைவு தோட்டக்காரனுக்கு வந்தது.

"உங்களுக்காகப் பெரிய குதிரை முட்டை ஒன்று வைத்துள்ளேன். பத்துப் பணம் தாருங்கள். அதைத் தருகிறேன். பண்ணை யார் அதைப் பார்த்திருந்தால் இருபது பணத்திற்கு வாங்கி இருப்பார்" என்றான்.

## பரமார்த்த குரு கதைகள்

இதைக்கேட்ட சீடர்கள் இருவரும் அவன் கால்களில் விழுந்தார்கள்.



"ஐயா! வழிச்செலவுக்காக ஒரு பணம் வைத்து இருக்கிறோம். அதையும் சேர்த்து நான்கு பணமாகத் தருகிறோம். குதிரை முட்டையைத் தாருங்கள்" என்று கெஞ்சினான்.

சரியான முட்டாள்கள். ஒரு காசும் பெறாத பூசணிக்காய்க்கு நான்கு பணம் தருகிறார்கள். நமக்கு நல்லநேரம் என்று நினைத்தான் அவன்.

"குருவிற்காகவும் உங்களுக்காகவும் குதிரை முட்டையை இந்த விலைக்குத் தருகிறேன். யாரிடமும் சொல்லிவிடாதீர்கள்" என்றான்.

மகிழ்ச்சியுடன் மூடன் நான்கு பணத்தை அவனிடம் தந்தான் அவன்.

குடிசைக்குள் இருந்த பூசணிக்காயை அவர்களிடம் தந்தான் அவன்.

பெரிய குதிரை முட்டை என்று இருவரும் மகிழ்ந்தார்கள்.

"குதிரை முட்டையைக் கவனமாக எடுத்துச் செல்லுங்கள்.

அதிலிருந்து அருமையான குதிரைக்குட்டி வெளியே வரும்" என்றான் அவன்.

பூசனிக்காயைத் தூக்கிக்கொண்டான் மூடன். இருவரும் புறப்பட்டார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க உயர்மட்டத்தின் பிரச்சினை நவிப்பிள்ளையின் வருகையுடன் தீரும்

## கூட்டுத்தளபதி ஜகத் ஜயசூரிய நம்பிக்கை

(கொழும்பு)

**மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் விவகாரத்தில் அமெரிக்காவின் உயர்மட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டாலே பிரச்சினை தீரும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் செய்யும் போது இந்தப் பிரச்சனை தீர்க்கப்படும் என்றும் இலங்கை பாதுகாப்பு படைகளின் கூட்டுத் தளபதி ஜகத் ஜயசூரிய நம்பிக்கை தெரிவித்துள்ளார்.**

மனித உரிமைகள் பிரச்சினை காரணமாக அமெரிக்க தரப்பினர் கொண்டிருக்கின்ற நிலைப்பாடும் எங்களின் நிலைப்பாடும் வெவ்வேறாக இருப்பது தான் இதற்கு காரணமாகும்.

இம்முறை ஐ.நாவின் மனித உரிமைஆணையர்நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வருகைதருவதால் குறித்த பிரச்சினை தீரும் என்று நினைக்கின்றேன்.

நவநீதம்பிள்ளை நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று பார்வையிடவுள்ளார். நாட்டின் உண்மைநிலைமையை வெளிப்படுத்த வேண்டியது அவரது கடமை.

அவர் கொழும்பில் தங்கியிருக்கமாட்டார். நாட்டின் பல பகுதிகளுக்கும் குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கும் செல்வார். இலங்கையின் இறுதிப் போரின் போது, வன்னியில் படை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இலங்கை இராணுவத்தின் 53 ஆம் பிரிவு, 57 ஆம் பிரிவு மற்றும் தற்போது ஐ.நாவில் இலங்கையின் பிரதிநிதியாக இருக்கின்ற மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் 58 ஆம் பிரிவு உள்ளிட்ட பல படையணிகள் மீது சர்வதேச அமைப்புகள் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அந்தக் குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசாங்கம் 'தொடர்ந்தும் மறுத்து வருகிறது.

இதேவேளை, அமெரிக்காவின் நடவடிக்கைகள் குறித்து இராணுவம் அதிருப்தியை வெளியிட்டுள்ளது. முக்கியமான சர்வதேச நிகழ்வு ஒன்றில் இலங்கையின் இரண்டு சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுக்கு சந்தர்ப்பம் மறுக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மனித உரிமை குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில், குறித்த உயர் இராணுவ அதிகாரிகளுக்கு இந்த சந்தர்ப்பம் மறுக்கப்பட்டிருந்தது. சந்தர்ப்பம் நிராகரிக்கப்பட்ட ஒரு அதிகாரிக்கு ஏற்கனவே நிகழ்வு ஒன்றில் பங்கேற்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

பின்னர் அமெரிக்க அரசாங்கம் அவர் மீதான குற்றச்சாட்டை வாபஸ் பெற்றுக் கொண்டதாகவும் தற்போது மீண்டும் சர்வதேச நிகழ்வொன்றில் பங்கேற்பதற்கு குறித்த அதிகாரிக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை எனவும் கூட்டுப்படைகளின் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் மற்றும் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க ஆகியோருக்கே இவ்வாறு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. சர்வதேச இராணுவ நிகழ்வு ஒன்றில் பங்கேற்பதற்காக இவர்கள் விண்ணப்பித்திருந்தனர். எனினும் மனித உரிமை காரணங்களைக் காட்டி குறித்த இரண்டு அதிகாரிகளின் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன.



சில தரப்பினர் இராணுவத்தினர் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்த முயற்சித்து வருவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வினை நேரடியாகவோ மறைமுகமாகவோ சீர்குலைப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் குறித்து இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கண்காணித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். (அ-2)

## அடையாள அட்டைக்கான விண்ணப்ப திகதி நீடிப்பு


(யாழ்ப்பாணம்)

தற்காலிக ஆள் அடையாள அட்டைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரிய தெரிவித்தார்.

செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதியுடன் முடிவடையவிருந்த முடிவுத் திகதி செப்டெம்பர் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என ஆணையாளர் தெரிவித்தார். யாழ்.பொது நூலகத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில் நடைபெற்ற வேட்பாளர்களுடனான கலந்துரையாடலிலேயே மேற்படி கால நீடிப்பை ஆணையாளர் மேற்கொண்டுள்ளார்.

இக்கலந்துரையாடலில் வேட்பாளர்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாகவே இக் கால நீடிப்புச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)





குளோறியல் ஜப்னா பவுண்டேசன் நிறுவனத்தால் நடத்தப்பட்ட யுத்தத்தினால் தாய்தந்தையரை இழந்து வாழும் சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, உடுவில், கோப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான ஆங்கில கற்கை நெறிக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு இணுவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு கொடியேற்று நிகழ்வு இடம்பெறுவதையும் விருந்தினராக கலந்து கொண்ட இந்தியத் துணைத்தூதுவர் மகாலிங்கத்துடன் புலமைப்பரிசில் பெற்ற மாணவர்களையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-மல்லாகச் செய்தியாளர்)

## 99 வீதமான வேட்பாளர்கள் சொத்து விபரங்களை ஒப்படைக்கவில்லை

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் 99 வீதமானவர்கள் சொத்து விபரங்களை ஒப்படைக்கத் தவறியுள்ளமாக டிரான்பெரன்சீ இன்டர் நஷனல் அமைப்பு அறிவித்துள்ளது.

இம்முறை மாகாணசபைத் தேர்தலில் 3 ஆயிரத்து 785 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர் என அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.ருகுனகே தெரிவித்துள்ளார்.

சொத்து விபரங்கள் பற்றிய தகவல்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் ஒப்படைக்குமாறு தேர்தல் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார். எனினும் நூற்றுக்கு ஒரு வீதமான வேட்பாளர்கள் கூட சொத்து விபரங்களை ஒப்படைக்கவில்லை.

தேர்தலில் வெற்றியீட்டும் அல்லது தோல்வியைத் தழுவும் வேட்பாளர்கள் அனைவரும் சொத்து விபரங்களை ஒப்படைக்க வேண்டும்.

அவ்வாறு செய்யத் தவறுவோருக்கு எதிராக தேர்தல் சட்டத்தின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## மாநாட்டில் பங்கேற்பது குறித்து இந்தியா மௌனம் காக்கிறது

### சஜின்வாஸ் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பது குறித்து இன்னமும் இந்தியா தீர்மானிக்கவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இம் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு இலங்கை விடுத்த அழைப்பை இந்திய மத்திய அரசாங்கம் நிராகரிக்கவோஅல்லது ஏற்றுக்கொள்ளவோ இல்லை என வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மாநாட்டில் பங்கேற்பது குறித்து இன்னமும் இந்தியா எவ்வித உத்தியோகபூர்வ அறிவிப்பையும் விடுக்கவில்லை. 54 நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்பார்கள்.

அத்துடன் இம் மாநாட்டில் பங்கேற்பதாக 150 முதல் 200 பிரதிநிதிகள் ஏற்கனவே உறுதியளித்துள்ளனர். இதில் பங்கேற்பது குறித்து இப்போதே உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் கிடையாது.

கனடா மாநாட்டில் பங்கேற்கப் போவதில்லை என உறுதியாக அறிவிக்கவில்லை. இம் மாத ஆரம்பத்தில் கனேடிய பிரதிநிதி பொதுநலவாய நாடுகள் பிரதிநிதிகளுடன் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

இவர்கள் மாநாட்டின் ஏற்பாட்டு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக இங்கு விஜயம் செய்திருந்தனர்.

எனவே, கனடாவும் மாநாட்டில் பங்கேற்பதை எதிர்பார்க்கின்றோம் என சஜின் வாஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். (அ-2)

## ஆட்கடத்தல் நடவடிக்கையை தடுக்க சர்வதேசம் உதவ வேண்டும்

### அமைச்சர் ஹக்கீம் கோரிக்கை

(கொழும்பு)

சர்வதேசத்தின் ஒத்துழைப்பு இல்லாது சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை நிறுத்தமுடியாது என்று நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவில் இடம்பெற்ற சட்டவிரோத ஆட்கடத்தலை தடுப்பது தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்டபோதே அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

சட்டவிரோத ஆட்கடத்தலை முறியடிக்க உள்ளூரில் பாரியமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும் சர்வதேசத்தில் ஆட்கடத்தல்களுக்கான வலையமைப்புக்கள் இரகசியமான முறையில் சிறப்பாக செயற்பட்டுவருகின்றன.

விடுதலைப் புலிகளுக்கு பிரதான ஆதாய மார்க்கமாக ஆட்கடத்தல் நடவடிக்கைகள் இருந்தன.

இன்று அவர்கள் உள்நாட்டில் தோற்கடிக்கப்பட்டாலும் குறித்த ஆதாய மார்க்கத்தில் மாற்றம் ஏற்படவில்லை என்று அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

எனவே, சர்வதேச ரீதியாக இதனைத் தடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படல் அவசியம் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரதான எதிர்க்கட்சி பலவீனமாக இருப்பதால் ஆளும் கட்சிக்குள் விருப்புவாக்கு போட்டி

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)

**பலவீனம் அடைந்திருக்கும் எதிர்க்கட்சியின் போட்டி இல்லாமையே ஆளும் கட்சி வேட்பாளர்களிடையே விருப்பு வாக்குப் போட்டிகள் ஏற்பட காரணம். எனினும் நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தல்களை நீதியாகவும் சுதந்திரமாகவும் நடத்துவதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பதாக ஐ.ம.சு. முன்னணியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

வடமேல் மாகாண சபை தேர்தலில் ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் உறவினர்கள் பலர் தேர்தலில் வேட்பாளர்களாகியுள்ளனர்.

இதனால் இத்தேர்தல் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெறுமா? என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

கவனயீர்ப்பு பிரேரணையொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இக்கேள்வியை எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றியபோதே அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

இலங்கையின் அரசியல் வரலாற்றில் அரசியல் தலைவர்களின் பிள்ளைகள் அல்லது உறவினர்கள் தேர்தல்களில் போட்டியிடுவது வழமையானதொன்று. முதலாவது பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவின் புதல்வர் டட்லி சேனநாயக்கவும் பிரதமராகப் பணியாற்றியுள்ளார்.

அதேபோல் முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் புதல்வி சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகவும் புதல்வரான அனுர பண்டாரநாயக்க சபாநாயகராகவும் கடமையாற்றியிருந்தனர்.

இவ்வாறு பல உதாரணங்களைச் சுட்டிக்காட்ட முடியும். இந்த நிலைமை இலங்கையில் மட்டுமன்றி ஆசிய பிராந்தியம், அமெரிக்கா உள்ளிட்ட பல உலக நாடுகளிலும் காணப்படுகின்றது. இதற்காக தேர்தல் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெறாது என்று கூற முடியாது.

வடமேல் மாகாண சபைத் தேர்தலில் ஆளும் கட்சி அரசியல் வாதிகளின் உறவினர்கள் போட்டியிடுகின்றனர்.

இது தொடர்பில் ஏதாவது பிரச்சினை இருந்திருக்குமாயின் அதனை எதிர்க்கட்சியினர், தேர்தல் ஆணையாளர் கட்சி செயலாளர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் சுட்டிக் காட்டியிருக்க முடியும்.

ஆனால், அங்கு அவர்கள் அதனைச் சுட்டிக்காட்டவில்லை. நாம் தேர்தல் விதிகளை மீறவில்லை. குறிப்பாக வடமாகாணத்தில் எந்தவொரு அரச வாகனமும் தேர்தலுக்கு பயன்படுத்தப்படவில்லை.

தேர்தல் திணைக்களத்தின் அனுமதி பெற்றே நாம் பிரசாரக் கூட்டங்கள் மற்றும் கட்சி அலுவலகங்களையும் அமைத்துள்ளோம். இந்த நிலையில் நடைபெறவிருக்கும் வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நீதியாகவும் சுதந்திரமாகவும் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

# மதங்கள் தொடர்பான சட்டம் நல்லிணக்கத்தை பாதிக்கும்

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிறுவனம்

(கொழும்பு)

பிரதான மதங்களின் இழிவு மற்றும் அனுபவங்கள் தொடர்பாக பௌத்த சாசன அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை குறித்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிறுவனம் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இவ்வறிக்கையின் அடிப்படையில் பிரதான மதங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு எதிராக புதிய சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

எனினும் பௌத்த சாசன அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கை ஏனைய மதங்களின் சுதந்திரத்தைப் பாதிக்கும் முதல்படியாக இருக்கும் என்று தனது அச்சத்தை மாற்றுக் கொள்கைகளுக்கான நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இந்தப் புதிய சட்டத்தின் மூலம் இலங்கையில் எதிர்பார்க்கப்படுகின்ற இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் என்பவற்றுக்கு பாதிப்பு ஏற்படலாம் என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் இந்தப் புதிய சட்டம் அரசியல் அமைப்பின் 10 ஆவது அமைப்பில் உள்ள மதம் சம்பந்தமான சுதந்திர போக்கைப் பாதிப்பதாகவும் நிறுவனம் குற்றம் சுமத்தியுள்ளது.

எனவே, நாடாளுமன்றத்தில் இந்தச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படும் போது அதனை நாடாளுமன்றம் நிராகரிக்க வேண்டும் என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிறுவனம் கோரியுள்ளது. (அ-2)

# கம்பஹாவில் தங்கம் கொள்ளை

(கொழும்பு)

கம்பஹாவில் இரண்டு கோடி ரூபா தங்க ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன. இக்கொள்ளைச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகலில் இடம் பெற்றுள்ளது.

இந் நகரில் அமைந்துள்ள நிதி நிறுவனமொன்றிலேயே தங்க ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக தெரிய வருவதாவது,

இனந்தெரியாத நபர்கள் நிறுவனத்தின் முகாமையாளர் மற்றும் ஊழியர்களை அச்சுறுத்தி தங்கத்தைக் கொள்ளையிட்டுள்ளனர்.

கெப் வண்டியில் சென்ற ஐந்து நபர்களே இவ்வாறு தங்க கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-2)

# நாட்டின் வளங்கள் சூறையாடப்படுகின்றன

## விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு

நாட்டைக் காப்பாற்ற தமக்கு ஆட்சி அதிகாரத்தை தாருங்கள் என்று மக்களிடம் வாக்குகளை கேட்டுப் பெற்று அதிகாரத்தை கைப்பற்றிய மஹிந்த அரசாங்கம் நாட்டு மக்களுக்கு சொந்தமான நிலங்கள், சொத்துக்கள், கனிய வளங்களை வெளிநாட்டு கம்பனிகளுக்கு தாரைவார்த்து வருகின்றது என நவசமசமாஜ கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

வடக்கிலும் தெற்கிலும் மக்களுக்கு சொந்தமான நிலங்களை அரசாங்கம் சூறையாடி அவற்றை பல்தேசிய நிறுவனங்களுக்கு விற்பனை செய்தும் குத்தகைக்கு விட்டும் வருகின்றது.

அதேநேரம் அபிவிருத்தி செய்யப் போவதாக தெரிவித்து நகர அபிவிருத்தி அதிகார சபை ஊடாக நகரை சுற்றியுள்ள நிலங்களையும் பலவந்தமாக அபகரித்து வருகின்றது.

இவ்விதமாக மக்களுக்கு சொந்தமான நிலங்களை அரசாங்கம் விற்பனை செய்வதுடன் அவற்றைக் குத்தகைக்கும் விட்டு தமது பொதிகளை நிரப்பிக் கொள்கிறது.

இதன்மூலம் அரசாங்கம் நாட்டை காப்பாற்றியதா? அல்லது மக்களின் சொத்துக்களைக் காப்பாற்றியதா? என்பது தெளிவாகியுள்ளது என்றார். (அ-2)

# ஆறுமுகன்தொண்டமானிடம் பொலிஸார் விசாரணை

மதுபோதையில் குழப்பம் விளைவித்ததாக அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானிடம் பொலிஸார் விசாரணை நடத்தவுள்ளனர்.

தனது ஆதரவாளர்களுடன் அதிக மதுபோதையில் தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் குழப்பம் விளைவித்ததாக அமைச்சரிடம் பொலிஸார் விசாரணை நடத்தவுள்ளனர்.

இவர் பொலிஸ் உத்தியோகத்தர்களை அச்சுறுத்தி அவர்களின் பணிக்கு இடையூறு விளைவித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு தலவாக்கலைக்கு சென்று பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் வாக்கு மூலங்களைப் பதிவு செய்து கொள்ளவுள்ளது.

அமைச்சரும் ஆதரவாளர்களும் குடிபோதையில் பொலிஸ் நிலைய வளாகத்தில் இரண்டு மணித்தியாலம் குழப்பம் விளைவித்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (அ-2)




- 1305 -ஸ்கொட்லாந்தின் நாட்டுப்பற்றாளர் வில்லியம் வொலஸ், லண்டனின் முதலாம் எட்வேர்ட் மன்னனால் தேசத்துரோத்துக்காகக் குற்றம் சாட்டப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.
- 1541 - பிரெஞ்சு நாடுகாண் பயணி ஜாக் கார்ட்டியேர் கனடாவின் கியூபெக் நகரை அடைந்தார்.
- 1555 - நெதர்லாந்தில் கால்வினிஸ்துகளுக்கு முழுமையான உரிமைகள் வழங்கப்பட்டன.
- 1784 - மேற்கு வட கரோலினா (தற்போது கிழக்கு டென்னசி) பிராங்கிளின் என்ற பெயரில் தனி நாடாக அறிவித்தது. இது ஐக்கிய அமெரிக்காவால் ஏற்கப்படவில்லை.
- 1821 - மெக்சிகோ, ஸ்பெயினிடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1839-சீனாவின் கிங் சீனர்களுடன் போரிடுவதற்காக ஐக்கிய இராச்சியம் ஹொங்கொங்கைக் கைப்பற்றியது.
- 1914 - முதலாம் உலகப் போர்: ஜப்பான் ஜேர்மனியுடன் போரை அறிவித்தது.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியும் சோவியத் ஒன்றியமும் போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் கைச்சாதிட்டனர். பின்லாந்து, உக்ரைன், போலந்து ஆகியவற்றை தமக்கிடையே பகிர்வது என்றும் இரகசிய முடிவெடுக்கப்பட்டது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியினர் லண்டன் மீது குண்டு வீச்சை ஆரம்பித்தனர்.
- 1948 - ஏ. கே. செட்டியார் தயாரித்த காந்தி பற்றிய முதல் வரலாற்றுத் திரைப்படம் தமிழிலும் தெலுங்கிலும் வெளியிடப்பட்டது.
- 1952 - அரபு லீக் அமைக்கப்பட்டது.
- 1966 - லூனார் ஆர்பிட்டர் 1 முதன் முதலாக சந்திரனின் சுற்றுவட்டத்தில் இருந்து எடுத்த பூமியின் படங்களை லூனார் ஆர்பிட்டர் 1 அனுப்பியது.
- 1973 - இண்டெல்சாற் தொலைத்தொடர்பு செய்மதி விண்ணில் ஏவப்பட்டது.
- 1975 - லாவோசில் கம்யூனிசப் புரட்சி வெற்றி பெற்றது.
- 1990 - ஆர்மேனியா சோவியத் ஒன்றியத்தில் இருந்து விடுதலை பெற்றது.
- 1990 - மேற்கு ஜேர்மனியும் கிழக்கு ஜேர்மனியும் ஒக்டோபர் 3 இல் இணைய விருப்பதாக அறிவித்தன.
- 2006 -நியூசிலாந்தின் ஆளுநராக ஆனந்த் சத்தியானந்த் பதவியேற்றார்.

### பிறப்புகள்

- 1914 - டி. எஸ். பாலையா, தமிழ்த் திரைப்பட நடிகர்
- 1919 - சுசுமு ஓனோ, ஜப்பானியத் தமிழறிஞர் (இ. 2008)

### இறப்புகள்

- 1951 - வ. ரா., தமிழ் எழுத்தாளர் (பி. 1889)
- 1997 -ஜோன் கெண்ட்ரூ, நோபல் பரிசு பெற்றவர் (பி. 1961)
- 2000 - ப. ரங்கராஜன் குமாரமங்கலம், இந்திய அரசியல்வாதி (பி.1952)


### சிறப்பு நாள்

- அடிமை வணிகத்தையும் அதன் ஒழிப்பையும் நினைவூட்டும் பன்னாட்டு தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசின் பலவீனமான பக்கங்கள் சீனாவின் துல்லியமான அவதானிப்பில்!

அம்பாந்தோட்டையில் கால் பதித்த சீனா, கொழும்பிலும் தனது காலை அகலப் பரப்பியுள்ளது. வருடமொன்றிற்கு 2.4 மில்லியன் கொள்கலன்களை கையாளக்கூடிய வகையில் கொழும்புத் துறைமுகத்தில் பாரிய கொள்கலன் மையமொன்றினை சீன அரசின் நிறுவனமான சைனா மெர்ச்சண்ட் ஹோல்டிங் இன்டர் நாசனல் தீர்மானித்துள்ளது. 500 மில்லியன் டொலர் முதலீட்டில், 2011 டிசெம்பரில் ஆரம்பிக்கப்பட்ட இம்மையத்தின் 85% பங்கு சீன நிறுவனத்திற்கு சொந்தம். மீதமுள்ள 15% பங்கு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அண்மையில் உத்தியோகபூர்வமாக இம்மையம் திறந்து வைக்கப்பட்டது.



இவைதவிர, இதற்கு அருகாமையில் பிறிதொரு கொள்கலன் மையத்தினையும் துறைமுக அதிகாரசபை நிர்மாணித்துக் கொண்டிருக்கிறது. அனேகமாக இக்கொள்கலன் மையம், அடுத்த வருடம் ஆரம்பத்தில் செயற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்கு ஆசியாவுக்கும் ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்காவிற்கும் இடையே கேந்திர முக்கியத்துவம்மிக்க மையப்புள்ளியில் நிலைகொண்டுள்ள இக்கொள்கலன் துறைமுகம், சீனாவின் கடல் போக்குவரத்துப் பாதையில் ஒரு முத்தாக அமையும். ஏற்கனவே, கடந்த ஜனவரியில், பாகிஸ்தான் குவடோர் துறைமுகத்தைக் கையேற்கும் ஒப்பந்தமொன்றிற்கான அத்திவாரம் இடப்பட்டுவிட்டதாக கூறப்படுகிறது.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்திலுள்ள இந்த குவடோர் துறைமுக அபிவிருத்தி நிர்மாணப் பணிகளுக்கு, சீன அரசே முதலீடு செய்தது. பின்னர் அத்துறைமுகம் சிங்கப்பூர் நிறுவனமொன்றினால் தற்போது நிர்வகிக்கப்படுகிறது. மேற்குலகப் புவிசார் அரசறிவியலாளர்களால் முன்வைக்கப்பட்ட இந்தியாவைச் சுற்றிவளைக்கும் சீனாவின் முத்துமாலை வியூகம் என்ற மூலோபாயக் கருத்துருவத்தின் அடுத்த படிநிலையை துறைமுகங்களை கையேற்க முற்படும் சீனாவின் நகர்வுகளிலிருந்து பார்க்க வேண்டும்.

வளர்ந்து வரும் ஆசிய நாடுகளோடு ஒப்பிடும் பொழுது, மொத்த உள்ளூர் உற்பத்தி குறைவாகவுள்ள நாடுகளில் சீனாவின் முதலீடுகள் பில்லியன் டொலர் கணக்கில் இருக்கின்றது.

வெளிப்பார்வைக்குப் பூதாகரமாகத் தெரிவது துறைமுக அபிவிருத்திக்கான முதலீடு மட்டுமே. ஆனால், உள்ளூர் உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்களிலும், மின்சார உற்பத்தியிலும், கனரக தொழிற்சாலை (திருகோணமலை) நிர்மாணிப்பதிலும் சீனாவின் முதலீடுகள் காத்திரமான பங்கினை வகிக்கின்றன.

## இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கனதியான முதலீட்டுக்கு முஸ்தீபு

மலாக்கா நீரிணைக்கு அண்மித்த நாடுகளில், கிழக்கு நோக்கிய பார்வை என்கிற புதிய வியூகத்துடன், அமெரிக்க ஆதரவுடன் நுழையும் இந்தியாவின் மூலோபாய நகர்வினை சமநிலைப் படுத்தும் வகையில், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கனதியான முதலீட்டு ஆதிக்கத்தை முன்னெடுக்க சீனா முற்படுவது போல் தெரிகிறது.

2005 இலிருந்து இற்றைவரை, 3.7 பில்லியன் டொலர்களை இலங்கையில் சீனாவின் அரச நிறுவனமான எக்சிம் வங்கி வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

அம்பாந்தோட்டைத் துறைமுகம், இரண்டாவது சர்வதேச விமான நிலையம் (மாத்தளை) மற்றும் இலங்கையின் முதலாவது நான்கு பாதைகள் கொண்ட அதிவேக நெடுஞ்சாலை என்பன எக்சிம் வங்கியின் உபயத்தில் கட்டப்பட்டவையே. இலங்கையில் சரிந்து வரும் பொருளாதார நிலைமையினையும் அதன் [illegible] எந்தப்புள்ளியில் [illegible] யும் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் திறைசேரிச் செயலாளர் ஜெயசுந்தராவைவிட, சீன வெளியுறவுக்கொள்கை வகுப்பாளர்கள் கவனமாகப் படித்து வைத்துள்ளார்கள்.

அதாவது, சர்வதேச தேயிலைச் சந்தையில் ஏற்பட்ட கடும் போட்டி, ஐரோப்பாவின் பொருளாதார மந்தநிலையினால் உல்லாசப் பயணத்துறையில் ஏற்படும் சரிவு, ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை இழப்பினால் ஆடை ஏற்றுமதியில் ஏற்பட்ட முடக்கமும் தொழிற்சாலைகளின் மூடுவிழாக்களும் ஈரான் மீதான அமெரிக்காவின் எண்ணெய்த் தடையால் உருவாகும் எரிபொருள் பற்றாக்குறை, வங்குரோத்து நிலைமையில் தள்ளாடும் அரச நிறவனங்கள், மத்திய கிழக்கில்- பரவலாக ஏற்பட்டுள்ள அரசுக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியினால் அங்கு பணிபுரியும் குடிமக்களால் வரும் வருவாயில் வீழ்ச்சி என்கின்ற, திறைசேரியின் வருவாய் ஊற்றுக்களை ஆழமாகப் பாதிக்கும் பல விடயங்களை சீனா [illegible] ஆய்விற்கு உட்படுத்தி [illegible] அண்மையில் வெளியாகிய சீனாவின் நீல நூலில் சொல்லப்படாத விவகாரங்களாக இவை இருக்குமென நம்பலாம்.

இதனடிப்படையில், தனது எதிர்கால பிராந்திய நலன் சார்ந்த துறைகளில், முதலீடுகளை அதிகளவில் குவிக்கும் யுக்தியை சீனா பிரயோகிப்பது போலுள்ளது.

துறைமுக அபிவிருத்தி ஊடாக வரும் மாற்றங்கள், மற்றவர்கள் தம்மில் தங்கி நிற்கும் சூழலை உருவாக்கும் என்று இலங்கை நம்புவதைச் சீனா கவனத்தில் கொள்ளும்.

வெளிநாட்டு நேரடி முதலீடு, துறைமுகங்களைக் கடந்து உள்ளே நுழையாவிட்டாலும், துறைமுகத்திலும் அதனை அண்டி உருவாக்கபடும் சுதந்திர வர்த்தக வலயங்களிலும் வந்து குவியுமென்று மஹிந்த அரசு எதிர்பார்க்கின்றது.

உதாரணமாக, இரண்டு பில்லியன் டொலர் பெறுமதிமிக்க தனியார் முதலீடுகளை கவர்ந்திழுப்பதற்கு, துறைமுக அபிவிருத்தி பெரிதும் உதவியிருப்பதாக இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் பிரியத் விக்கிரம அண்மையில் தெரிவித்த கருத்து இந்த எதிர்பார்ப்பினை உறுதி செய்கிறது.

இதனடிப்படையில், கடந்த வாரம் சுதந்திரத் துறைமுகங்களாக அப்பாந்தோட்டையும் கொழும்பும் அரசால் பிரகடனப்படுத்தப்பட்டதை புரிந்து கொள்ளலாம். ஒரு சட்ட மூலத்தின் பிரகாரம் இவை, சுதந்திர துறைமுகங்களாக அறிவிக்கப்பட்டதோடு, கட்டுநாயக்கா மற்றும் கொக்கல ஏற்றுமதி வலயம், மாத்தல ராஜபக்ச சர்வதேச விமான நிலையம் என்பன, வரி அறவிடப்படாத சரக்குகளை தேக்கி வைக்கும் இடங்களாக (கிடங்கு) மாற்றப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் முதலீடு செய்பவர்கள், தொழிற்சாலைகளை அமைப்பவர்கள், அங்கு உற்பத்தியாகும் பொருட்களை மீள் ஏற்றுமதி செய்யலாம். ஆனால், இப்பொருட்களை, நாட்டின் உள்ளூர் சந்தையில் விற்பனை செய்ய முடியாது என்கிற நிபந்தனையும் உண்டு.

இலங்கையுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளும் ஆசிய பசுபிக் வர்த்தக உடன்பாட்டில் இணைந்தவர்களும். இச்சலுகைகளை பயன்படுத்திக் கொள்ளலாம் என்கிறார் நிதியமைச்சின் வர்த்தகம் மற்றும் முதலீட்டு கொள்கைகளுக்கான பணிப்பாளர் நாயகம் சமன் எக்கநாயக்க.

அதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்தோடும் இவ்வகையான வர்த்தக உடன்பாடுகளை மேற்கொள்ள, இலங்கை பலகாலமாக முயற்சித்து வருவதை இங்கு குறிப்பிட வேண்டும். ஆனாலும் ஒன்றியத்துடனான நீண்ட உரையாடல்களின் பின்னர், இந்தியாவானது இதே விதமான வர்த்தக உடன்பாடு ஒன்றினை விரைவில் மேற்கொள்ளப்போகிறது என்பதைக் கவனிக்க வேண்டும்.

ஆகவே, விரிந்த பார்வையினூடாக இந்த மாறுதல்களை அவதானித்தால், திறைசேரியில் அபரிமிதமாக குவிந்திருக்கும் டொலர்களின் சொந்தக்காரராகிய ஆசியாவின் பொருண் மிய ஜாம்பவான் சீனா, இலங்கை அரசின் பலவீனமான பக்கங்களைத் துல்லியமாக கணித்து வைத்திருக்கும் அதே வேளை, அந்தப் பலவீனங்களைத் தனதாக்கிக் கொள்ளும் நகர்வினை விரைவுபடுத்துகிறது என்பதை மறுக்க முடியாதுள்ளது.

-இதயச்சந்திரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசில்லா ப:.யர்பொக்ஸ் தமிழில்....



மொசில்லா பஃயர்பொக்ஸ் என்னும் தேடுதல் இயந்திரம் இணையத்தில் மிகவும் பிரசித்தி பெற்றது.இந்த தேடுதல் இயந்திரம் ஆங்கிலத்திலும் 120 ஏனைய மொழிகளிலும் இயங்குகின்றது. இப்போது தமிழிலும் வெளிவந்துள்ளது.

இணையத்தில் நன்கு அனுபவமுடைய, தமிழிலும் நல்ல ஞானம் உள்ள தொண்டர்கள் பத்துபேர் இணைந்து, இந்த தேடுதல் இயந்திரத்தை தமிழில் உருவாக்கியுள்ளார்கள். இந்த் தமிழ் இயந்திரத்தில் உள்ள சிறப்பு அம்சம் என்னவென்றால் அநேகமாக எல்லா ஆங்கில சொற்களுக்குமே இணையான தமிழ் சொற்களை பாவித்திருப்பதுதான். ஏனையமொழிகள், மொழிபெயர்ப்பு பாதி ஆங்கிலத்திலும், பாதி ஏனைய மொழியும் கலந்ததாக உள்ளன. ஆனால் தமிழில் மட்டும் கிட்டத்தட்ட எல்லா ஆங்கில சொற்களுக்கும் தமிழ் மொழி பெயர்ப்பையே உபயோகித்திருப்பதாக தொண்டர் குழுவிலிருக்கும் பொறியியல் பட்டதாரி அருண் பிரகாஷ் தெரிவிக்கின்றார்.

உதாரணமாக தமிழில் Fileஎன்பதற்கு "கோப்பு" என்றும் Preferences என்பதனை "விருப்பங்கள்" என்றும் Copy என்பதை "நகல் ஏடு" என்றும் கிட்டத்தட்ட எல்லா ஆங்கில பதங்களுக்கும் தமிழையே உபயோகித்திருப்பதாக அவர் மேலும் கூறினார்.

கடந்த ஒரு வருடகாலமாக நடைபெற்று வந்த இந்த மொழிபெயர்ப்பு பணி இப்போது நிறைவடைந்துள்ளது.

# Windows 8.1 இன் முழுமையன பதிப்பு ஒக்டோபர் 17 இல்....




உலகின் முதற்தர இயங்குதள வடிவமைப்பு நிறுவனமான மைக்ரோசொப்ட் கடந்த வருடம் Windows 8 எனும் இயங்குதளத்தினை அறிமுகப்படுத்தியிருந்தது.


தொடுதிரைத் தொழில்நுட்பசாதனங்களில் இலகுவாக பயன்படுத்தக்கூடியதாக உருவாக்கப்பட்ட இந்த இயங்குதளம் மக்கள் மத்தியில் சிறந்த வரவேற்பைப் பெற்றிருந்தது.

இந்நிலையில் இந்த இயங்குதளத்தின் புதிய பதிப்பான Windows 8.1 இயங்குதளத்தினை வடிவமைக்கும் முயற்சியில் முழு மூச்சாக செயற்பட்டு வந்த மைக்ரோசொப்ட் சில மாதங்களுக்கு முன்னர் பீட்டா பதிப்பினை வெளியிட்டிருந்தது.

தற்போது இதன் முழுமையான பதிப்பினை மக்களின் பாவனைக்காக எதிர்வரும் ஒக்டோபர் 17ஆம் திகதி வெளியிடப்போவதாக அந்நிறுவனம் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

# மின்சாரம் இன்றி மின்னேற்ற....

இனிமேல் கைபேசியின் மின் சக்தி தீர்ந்துவிட்டால் மின்சாரத்தை தேடி ஓட வேண்டியதில்லை, இருந்த இடத்திலிருந்து கைபேசிகளுக்கு மின்னேற்றம் செய்து



கொள்ளலாம்.

நம்மை சுற்றி எந்நேரமும் அலைவரிசைகள் இருக்கிறது என்பதை நாம் அறிவோம்.

எங்கோ ஒலிபரப்பாகும் ரேடியோவை கேட்க முடிகிறது. அதேபோல எங்கோ ஒளிபரப்பாகும் TV ஐயும் எம்மால் பார்க்க முடிகிறது.

அதுமட்டுமா Wifi-யின் மூலம் மடிக்கணனியில் இணையத்தை பயன்படுத்தலாம்.

இவ்வாறு பல அலைவரிசைகள் எம்மைச் சுற்றி எப்பவுமே காணப்படுகிறது, காரணம் இதில் எலக்ட்ரான்கள் உள்ளது.

இதனைப் பாவித்து பற்றரிகளை சார்ஜ் செய்யும் சிப் ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள்.

இதனை கைபேசியில் புகுத்தினால், நாம் அவசரத்துக்கு சார்ஜ் செய்ய அலையவேண்டியது இல்லை.

பற்றரி வீக் ஆனால், ஒரு பட்டனை அழுத்தினால் போதும். சார்ஜருடன் இணைத்தது போல அது சார்ஜ் செய்ய ஆரம்பித்துவிடும்.

அதிக மின்சாரத்தை அது உற்பத்திசெய்யாவிட்டாலும் பரவாயில்லை. அவசரத்துக்கு உதவும் வகையில் அது மின்சாரத்தை தயாரித்து பற்றரியை சார்ஜ் செய்யும் திறன் கொண்டது.

அதிலும் நாம் நல்ல சிக்னல் கிடைக்கும் இடங்களில் இருந்தால், அங்குள்ள Routers, TV சிக்னல்கள் மற்றும் ரேடியோ சிக்னல்களின் கதிர்களை அது பாவித்து மின்சாரத்தை உற்பத்திசெய்துவிடும்.

இதுபோன்ற சாதனங்கள் விரைவில் சந்தையில் வர உள்ளது, இது மிகவும் அதிசயமான கண்டுபிடிப்பு தான் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# ஆடம்பர மோட்டார் இல்லம்

"தி ஹீட்" என்று பெயரிடப்பட்டிருக்கும் 53 அடி நீளம் கொண்ட மோட்டார் இல்லத்தை பிரபல நடிகர் அஷ்டன் கட்சர் வாங்கியுள்ளார். இந்த ஆடம்பர மோட்டார் இல்லம் 30 டொன் எடை கொண்டது.


ஹைட்ராலிக் முறையில் இதன் இரண்டாவது தளம் மேலேழும்பும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. பக்கவாட்டு சுவர் மற்றும் பர்னிச்சர்கள் மடங்கி விரியும் வசதி கொண்டதாக இருக்கிறது. இரண்டாவது தளம் விரிவடையும்போது 1,100 சதர அடி பரப்புக்கு இடவசதி கிடைக்கும். முழுவதுமாக மேலே விரிவடையும் போது 15 அடி 10 இஞ்ச் உயரம் கொண்டதாக இருக்கும்.

இந்த ஆடம்பர மோட்டார் இல்லத்தில் ஏழு இடங்களில் 60 இஞ்ச் 3டி தொலைக் காட்சிப் பெட்டிகள் பொருத்தப்பட்டுள்ளன. 2 குளியலறைகள், கிரானைட் பினிஷிங் கொண்ட சமையலறை, கூட்ட அரங்கம் என பலவிதமான வசதிகளை கொண்டிருக்கிறது.

வெளியில் நிலவும் சீதோஷ்ணத்திற்கு தகுந்தாற்போல் மோட்டார் இல்லத்தின் வெளியில் பொருத்தப்பட்டிருக்கும் சென்சார் உதவியுடன் இந்த மோட்டார் இல்லம் தானியங்கி முறையில் தேவைப்படும்போது குளிர்ச்சி அல்லது வெப்பப்படுத்தும் வசதிகளை கொண்டிருக்கிறது.

இந்த ஆடம்பர மோட்டார் இல்லத்தை சுற்றி 360 டிகிரி கோணத்தில் கண்காணிக்கும் வசதி கொண்ட கமராக்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. அழைப்பு மணியை விருந்தினர் அல்லது வெளியாட்கள் அடிக்கும்போது, வெளியில் நிற்கும் நபரின் உருவம் மோட்டார் இல்லத்தில் பொருத்தப்பட்டிருக்கும் டிவி திரைகளில் தெரியும்.

ஆன்டர்சன் மொபைல் எஸ்டேட் நிறுவனத்தின் ரான் ஆன்டர்சன்தான் இந்த மோட்டார் இல்லத்தை கட்டிக் கொடுத்துள்ளார். வின் டீசல், ஷரோன் ஸ்டோன், மரியா கரே உள்ளிட்ட அமெரிக்கப் பிரபலங்களுக்கும் இவர் தான் ஆடம்பர மோட்டார் இல்லங்களை கட்டிக கொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் ௯௦ வீதமான மக்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது

## வடமாகாண பிரதி பொது முகாமையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் 90 வீதமானவர்களுக்கு இலங்கை மின்சாரசபையினால் மின்சாரம் வழங்கப் பட்டுள்ளதாக வடமாகாண பிரதிப் பொதுமுகாமையாளர் டி.கே.பி.யு. குணதிலக தெரிவித்துள்ளார். அத்தோடு யுத்தம் காரணமாக மின்விநியோகம் முற்றாகத் தடைப்பட்டிருந்த கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் மின்சார இணைப்புப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.**

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 30 வருடகால யுத்த அழிவுகளின் போது பாதிக்கப்பட்டிருந்த மின்சார இணைப்பு நடவடிக்கைகள் தற்போது மிகவும் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக கடந்த 2012 ஆம் ஆண்டு மட்டும் யாழ்.மாவட்டத்தில் 90 வீதமான வீடுகள் மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் உட்பட அனைத்து பிரதேசங்களும் இலங்கை மின்சாரசபையூடாக மின்சாரத்தைப் பெற்றுள்ளன.

இதுதவிர யுத்தம் காரணமாக முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்த கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான மின்சார விநியோகம் கடந்த வருட இறுதியில் கிளிநொச்சி மாவட்டம் 32 வீதத்தையும் முல்லைத்தீவு மாவட்டம் 28 வீதத்தையும் அடைந்திருந்தன.

இதனைவிட வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டம் 83 வீதத்தையும் மன்னார் மாவட்டம் 60 வீதத்தையும் அடைந்திருந்தன.

இவ்வாறு இலங்கை மின்சார சபையினால் மின்விநியோகம் மிகவும் வேகமாக வழங்கப்பட்டு வருகின்றது.

அத்தோடு மீள் குடியேற்றம் இடம் பெறும் பகுதிகளிலும் மின்சாரம் வழங்க எமது மின்சார சபை உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கென இச்சபை பலநூற்றுக் கணக்கான மில்லியன் ரூபாய்களைச் செலவு செய்துள்ளது.

இதுதவிர வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் இலவசமான மின்சார இணைப்புக்களையும் இச்சபை மேற்கொண்டு வருகின்றது எனவும் தனியாரிடம் இச்சபை மின்சாரத்தைக் கொள்வனவு செய்து பொது மக்களின் நன்மை கருதி குறைந்த செலவில் அவர்களுக்கு வழங்கி வருவதாகவும் அபிவிருத்திப் பணிகள் மற்றும் மின் இணைப்பில் மாற்றங்களைக் கொண்டு வரும் போது மின்சாரம் தடைப்படுவதை தவிர்க்க முடியாதுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-6)

## பக்தி விஜயம் வெளியீடு




(யாழ்ப்பாணம்)

மாதாந்தம் வெளியாகும் பக்தி விஜயம் சஞ்சிகையின் செப்டெம்பர் மாத மலர் வெளியாகி யுள்ளது.

இச்சஞ்சிகையில் நீல்லூரின் சிறப்பு இந்து சமய கட்டுரைகள், கதைகள், சைவ உணவுகளில் உயிரியல் விஞ்ஞானம், தெய்வீக தகவல்கள் ஆகியவற்றைத் தாங்கி இம்மலர் வெளிவந்துள்ளது. (அ)

## நாம் இராணுவமயப்படுத்தப்பட்டிருப்பதையே வெளிவேரிய சம்பவம் உணர்த்துகிறது

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு



நாடு இராணுவ மயமாக்கப்பட்டிருப்பதை வெலிவேரிய சம்பவம் நன்றாகவே உணர்த்தியிருக்கின்றது. தெற்கில் இவ்வாறெனில் வடக்கைப் பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். வடக்கு மக்கள் பற்றி சிந்திக்காவிட்டாலும் அதை கருத்தில் கொள்ளத் தேவையில்லை. தெற்கை கருத்திற் கொண்டாவது நாடு இராணுவமயமாக்கலுக்கு முற்றுப் புள்ளி வைத்து முடிவு காணுமாறு அரசாங் கத்திடம் கோரிக்கை விடுவிப்பதாக தமிழ் தேசியத் கூட்டமைப்பு எம்.பி. யான எம்.ஏ.சுமத்திரன் நேற்று முன் தினம் தெரிவித்தார். பாராளுமன் றத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வெலிவேரிய சம்பவம் தொடர்பான சபை ஒத்தி வைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு கோரிக்கை விடுத்ததார். அவர் அங்கு மேலும் கூறுகையில், வெலிவேரிய சம்பவத்துடன் தொடர்புடைய குடிநீர்ப்பிரச்சினை குறித்து இங்கு பேசப்பட்டிருப்பினும் அங்கு இடம் பெற்ற சம்பவமே மிக முக்கியத் துவம் பெற்றிருக்கின்றது. குடிநீர் என்பது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால் அந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். அதே போன்று அங்கு கொல்லப்பட்ட மக் கள் தொடர்பில் நாம் எமது கவலை யையும் தெரிவித்துக்கொள்கிறோம். இதிலுள்ள பிரச்சினை என்னவெனில் பொதுமக்கள் பிரச்சினைகளின் போது அதில் இராணுவத்தை எவ் வாறு ஈடுபடுத்த முடியும் என்பதே ஆகும். (அ-2)

## மட்டு.மாவட்ட அரச அதிபருக்கு சிறந்த பெண்மணிக்கான விருது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் பி.எஸ்.எம்.சார்ள்ஸுக்கு இந்த வருடத்திற்கான சிறந்த பெண்மணி விருது வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்றைய தினம் நடைபெற்ற விருதுவழங்கும் நிகழ்வொன்றில் வைத்து இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டதாக அரசாங்க தகவல் திணைக்கள இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

பெண்களுக்கான முகாமைத்துவ நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் குறித்த விருது வழங்கும் நிகழ்வில் துறைசார் ரீதியில் இவ்வருடம் தெரிவு செய்யப்பட்ட சில பெண்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். இந் நிகழ்வில் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, இலங்கைக்கான அவுஸ்ரேலிய தூதுவர் றொபின் மூடி ஆகியோர் கலந்தது கொள்ளவுள்ளனர். தொழில்சார் அபிவிருத்திகளையும் பெண்களின் முன்னேற்றத்தையும் ஊக்குவிக்கும் வகையில் 2012 ஆம் ஆண்டு முதல் இந்த விருது வழங்கப்படுகின்றமை குறிப்பி டத்தக்கது. (அ-2)

## மும்மொழிகளிலும் தேர்தல் நடவடிக்கை

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலின் நடவடிக்கைகளை மும்மொழிகளிலும் முன்னெடுக்குமாறு தேர்தல் ஆணையாளரிடம் தேசிய மொழிகள் ஆணைக்குழு கோரியுள்ளது. விசேடமாக தேர்தலுக்கு பயன்படுத்தும் ஆலோசனை கையேடுகள், அறிவித்தல்கள் உள்ளிட்ட ஆவணங்களை மும்மொழிகளிலும் தயாரிக்குமாறு ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ரணவக்க குறிப்பிட்டுள்ளார். தேர்தல் நடைபெறவுள்ள வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்படுவதே இதன் நோக்கமென அவர் கூறியுள்ளார்.

இதற்குத் தேவையான அதிகாரிகளை நியமிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தேசிய மொழிகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (அ-2)

## வனப் பகுதியிலிருந்து உடற் பாகங்கள் மீட்பு

பேராதனை பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவன் மற்றும் மாணவியின் உடல் பாகங்கள் அக்குரஸ்ஸ வில்பிட வனப் பகுதியில் இருந்து நேற்றுமுன்தினம் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.


இவர்களது உடல் பாகங்கள் கிடைத்த இடத்திலிருந்து கிடைத்த தேசிய அடையாள அட்டைகள் மூலம் உயிரிழந்தவர்கள் கிஷான் சஜித் (வயது 23) மற்றும் திலினி (வயது 26 ) என அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

இவர்கள் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இச் சம்பவம் தொடர்பில் அக்குரஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

## வாக்களிக்க வசதிகளை ஏற்படுத்துக; இடம்பெயர்ந்தோர் கோரிக்கை



இடம் பெயர்ந்துள்ள பதினொராயிரத்து 500 வாக்காளர்கள் இம்முறை மாகாணசபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கு வசதிகளை செய்து தருமாறு கோரி விண்ணப்பித்துள்ளனர். அந்த விண்ணப்பங்களின் தகைமை குறித்து ஆராயும் செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக மேலதிக தேர்தல் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க குறிப்பிட்டார். தமது சொந்த இடங்களில் வதியாதோர் மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் கோரி விண்ணப்பிப்பதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. இந்த கால அவகாசம் கடந்த 12ஆம் திகதியுடன் முடிவடைந்ததாக தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது. இதன் பொருட்டு வடமாகாணத்தைத் சேர்ந்த இடம்பெயர்ந்த வாக்காளர்கள் பெரும்பாலானோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கிடைத்திருப்பதாக தேர்தல்கள் செயலகம் மேலும் கூறியுள்ளது. (அ-2)



**இந்தியாவின் தென் மேல் கரைக்கு அப்பாலுள்ள லக்ஷதீவுக்காக கொழும்பு டொக்யாட் நிறுவனம் நிர்மாணித்த 250 தொன் சரக்கு கப்பல் நேற்று வியாழக் கிழமை தனது கன்னி பயணத்தை ஆரம்பித் தது.**

**இந்த கப்பல் 400 பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடியது எனவும் குறிப் பிடத்தக்கது. அக் கப்பலை படத்தில் காணலாம்.**

## சொற்பொழிவு

புத்தூர் ஆலடி முருகன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நடைபெற்று வருகின்ற நிலையில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7மணிக்கு பண்டிதர் ப்பொன். சுகந்தன் கந்த புராண கலாசாரம் எனீனும் விடயம் பற்றி சிறப்பு சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்வி செயற்பாடுகள் தொடர்பான விசேட செயற்குழுவின் பரிந்துரைகள்

(கொழும்பு)

**5 வயது முதல் 16 வயது வரையான சகல பிள்ளைகளுக்கும் பாடசாலை கல்வியை கட்டாயப்படுத்த வேண்டும் எனவும் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பாத பெற்றோரை தண்டிக்க சட்டம் அமைக்க வேண்டும் எனவும் கல்விச் செயற்பாடுகள் தொடர்பான விசேட பாராளுமன்ற செயற்குழு பரிந்துரை செய்துள்ளது.**

முதலாம், இரண்டாம் மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு வீட்டு வேலை கட்டாயமாக்கப்படக் கூடாது எனவும் பாடசாலைப் பிள்ளைகள் கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்துவது தடை செய்ய வேண்டுமெனவும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய கல்விக்கொள்கையொன்றை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஆளும்கட்சி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 23 பேரடங்கிய பாராளுமன்ற ஆலோசனைக் குழுவின் அறிக்கையை கல்வி அமைச் சர் பந்துல குணவர்த்தன நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

புதிய கல்விக் கொள்கை மற்றும் யோசனை அடங்கிய அறிக்கையை சமர்ப்பித்த அமைச்சர், அரசாங்கம் மாறும்போதும்; கட்சிகளின் ஆட்சிகள் மாறும் போதும் கல்விக் கொள்கைகளில் மாற்றம் ஏற்படாதவாறு புதிய கல்விக் கொள்கை மற்றும் யோசனைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஆளும் மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த 23 உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக் குழு இப்புதிய கல்விக் கொள்கை தொடர்பில் விரிவாக ஆராய்ந்தே இதனைத் தயாரித்துள்ளது.

மதத் தலைவர்கள், கல்விமான்கள், பாடசாலை அதிபர்கள், அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட ஆயிரத்துக்கும் அதிகமானவர்களை தெரிவுக் குழுவுக்கு அழைத்து அவர்களின் சாட்சிகள் மற்றும் யோசனைகளைப் பெற்றே இப்புதிய கல்விக கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இலவசக் கல்வியை மேலும் பலப்படுத்தும் வகையிலும் ஆட்சிமாறும் போது மாணவர்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படாதவாறு இப்புதிய கல்விக் கொள்கையை நாம் தயாரித்துள்ளோம்.

இப்புதிய கல்விக் கொள்கைக்கு கட்சி பேதங்களை மறந்து அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இப்புதிய கொள்கையின் மூலம் இலவசக் கல்வியைப் பெறும் 40 இலட்சம் மாணவர்கள் நன்மையடைவதுடன் இலவசக் கல்வியும் பலப்படுத்தப்படும்.

இதன் அடிப்படையில், புதிய கல்விக் கொள்கை சட்டமூலம் தயாரிக்கப்படும் என்றார். புதிய கல்விக் கொள்கையில் கல்வி முறைமை, கல்வி முகாமைத்துவம், தலைமைத்துவம், கல்வித் தரம், கல்வித் துறைசார் சேவைகள் அடங்கலாக கல்வித் துறையுடன் தொடர்புடைய சகல விடயங்களையும் உள்ளடக்கி இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.வரவு செலவுத் திட்டத்தினூடாக கல்விக்கு ஒதுக்கப்படும் நிதி ஒதுக் கீட்டை 5 வீதமாக உயர்த்த முயற்சி மேற்கொள்ள வேண்டும் எனவும் ஆரம்பப் பாடசாலை கல்வி மத்திய அதிகாரப் பிரிவினால் மேற்பார்வை செய்யப்பட வேண்டும் எனவும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்விக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய சில பரிந்துரைகள்,

- பண்புசார் தரமிக்க சம நிலைமையான கல்வியினைப் பெறுவதற்காக சகல பிள்ளைகளுக்கும் நியாயமான சந்தர்ப்பங்களை வழங்குவது அரசின் பொறுப்பாகும்.
- சகல பிள்ளைகளுக்கும் இலவசக் கல்விச் சந்தர்ப்பத்தினை உறுதி செய்து பாதுகாப்பது அரசின் பொறுப்பாகும்.
- பெரும்பான்மையான இலங்கை சிறார்களின் தாய்மொழி மற்றும் தேசிய மொழி சிங்களம் அல்லது தமிழாக இருக்க வேண்டும். தேசிய மற்றும் சர்வதேச இணைப்பு மொழியாக ஆங்கிலம் கற்பிக்கப்பட வேண்டும்.
- பாடசாலைகளில் தமது சமயத்தைக் கற்க மற்றும் பின்பற்றவும் மாணவர்களுக்கு உரிமை இருக்க வேண்டும்.
- பாடவிதானம், கற்றல் - கற்பித்தல் ஒழுங்கு விதிமுறைகள், நேரசூசிகள் என்பன சகல 5 வருடங்களுக்கும் ஒருமுறை மாற்றப்பட வேண்டும்.
- சாதாரண தரப் பரீட்சையின் பின்னர் கிடைக்கும் பெறுபேறுகளுக்கு அமைய பிள்ளைகளுக்கு உயர்தர கல்விக்கு அல்லது பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் பயிற்சிப் பாடநெறிக்கு வகைப்படுத்தி உள்ளடக்கப்பட வேண்டும்.
- உயர்தரப் பரீட்சைக்குப் பின்னர் பிள்ளைகள் பொருத்தமான பல்கலைக்கழகக் கல்விக்கு ஏனைய மூன்றாம் நிலைக் கல்வக்கு அல்லது பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் பாட நெறியில் வகைப்படுத்தி ஈடுபடுத்த வேண்டும்.
- பரீட்சைத் திணைக்களத்தினால் தேசிய மட்டத்தில் நடக்கும் பரீட்சைகளின் கால எல்லை மீளாய்வு செய்யப்பட வேண்டும். எந்தப் பரீட்சை பெறுபேறுகளை மதிப்பிடும் கால எல்லை 10 வாரங்களில் இருந்து 8 வார காலமாக குறைத்து பெறுபேறு வழங்கப்பட வேண்டும்.
- குறைந்த பட்சம் நாளொன்றில் ஆரம்பப் பிரிவு வகுப்புகள் 5 மணித்தியாலங்களும் இடை நிலைப் பிரிவுக்காக 6 மணித்தியாலங்களும் கற்பிக்கப்பட வேண்டும்.
- பாடசாலை பையின்நிறையை குறைப்பதற்கான ஒழுங்குகள் வகுக்கப்பட வேண்டும். புத்தகங்களின் பருமனை குறைக்கக் கூடியவாறு அவற்றை சிறிய பிரிவுகளாக அச்சிடுவது மிக முக்கியமாகும்.
- கனிஷ்ட இடைநிலை மட்டங்களுக்கு மேற்பட்ட பாடங்களை ஆங்கில மொழி மூலம் கற்பித்தலை முடியுமான அளவு ஊக்குவிக்க வேண்டும்.
- உயர்தர வகுப்புகளுக்காக கணிப்பொறி (Calculator) பயன்படுத்த இடமளிக்க வேண்டும்.
- சகல மாணவர்களதும் பாடசாலை சமுகமளிப்பு 80 வீதத்தை விட அதிகமாக இருக்க வேண்டும்.
- தேசிய கல்விக் கல்லூரிகளின் பாடநெறிக்கால எல்லையை 4 வருடங்கள் வரை நீடித்து அதனை பட்டப்பாடநெறியாக மாற்ற வேணடும்.
- பல்கலைக்கழக பட்டதாரிகளை ஆசிரியர்களாக சேர்க்கையில் தேசிய கல்வி நிறுவகத்தினூடாக 3 மாதங்களை விட கூடுதல் காலம் முழு நேரப் பயிற்சி வழங்குவது கட்டாயம். (அ-2)


# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் திரு. சின்னையா கந்தையா

(ஓய்வு பெற்ற கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கொள்வனவு முகாமையாளர்)

ஏழாலை பளையைப் பிறப்பிடமாகவும் திருநகர் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் ஓய்வு பெற்ற கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கொள்வனவு முகாமையாளர் திரு. சின்னையா கந்தையா அவர்களின் 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த
உங்களை வானுறைந்த தெய்வமாய்
நாம் வணங்கி ஆண்டொன்று
ஆனதப்பா...
அகத்தின் எண்ண அடுக்குகளில்
ஒவ்வொரு கணத்தையும்
அஞ்சலித்தே நகர்க்கின்றோம்
துயரை துடைத்தெறிந்து அசாதாரண
புன்னகை சொரியும் உங்கள் நேச வதன
அருகாமையை உணர்ந்தபடி...
ஆண்டுகள் பல ஆனாலும் உங்கள்
நினைவுகள் நெஞ்சில் நிறைந்திருக்க
வேண்டும் அப்பா...

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், நண்பர்கள், உறவினர்கள்.

தகவல்:
குடும்பத்தினர்

(சி/4420)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






கொக்கிளாயிலிருந்து வெளிமாவட்ட மீனவர்கள் வெளியேறாவிடின்

# உண்ணாவிரத போராட்டம் உறுதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கொக்கிளாய் கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட தங்கூசி வலை, இழுப்பு வலை, கூட்டுவலை, ஜக்காவலை, படகு, இயந்திரம் என்பவற்றை பயன்படுத்தி வெளிமாவட்ட மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருவதாகவும் இந்நிலை தொடருமாயின் உண்ணாவிரதப் போராட்டத்தில் தாம் ஈடுபட வேண்டியேற்படும் எனவும் அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சாலை, கடனீரேரி, நந்திக்கடல், நாயாறு, கொக்கிளாய் ஆகிய கடற்பரப்புக்கள் உள்ளபோதும் கொக்கிளாய் கடற்பரப்பில் மட்டுமே சட்டவிரோத மீன்பிடித் தொழில் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் வடக்கு, கொக்குத்தொடுவாய் தெற்கு, கொக்குத்தொடுவாய் மத்தி ஆகிய 6 கிராமங்களில் 550 இற்கு மேற்பட்ட மீனவ குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

மேற்படி 6 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 400 குடும்பங்களுக்கு கடற்றொழிலை மேற்கொள்ள எவ்விதமான வாழ்வாதார உதவிகளும் வழங்கப்படவில்லை.

இந் நிலையில் வெளிமாவட்ட மீனவர்களின் செயற்பாடுகளாலும் இம் மக்கள் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

கொக்கிளாய் மீனவர்கள் வீச்சு வலை, விடுவலை என்பவற்றை கொண்டு தெப்பம், குல்லா ஆகியவற்றை பயன்படுத்தி மீன்பிடி தொழிலில் ஈடுபடுகின்றபோது வெளிமாவட்ட மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடி தொழிலில் எவ்வாறு ஈடுபட முடியும் என இவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதனால் வருடம் முழுவதும் மேற்கொள்ளக் கூடிய தொழில் வளம் ஒரு மாதத்திற்குள்ளேயே குறைவடைந்து செல்கின்றது.

நந்திக்கடல், நாயாறு, சாலை ஆகிய கடற்பரப்புக்களில் இயந்திரப் படகு பயன்படுத்துதல் தடைசெய்யப்பட்டுள்ள போதிலும் கொக்கிளாயில் மட்டும் இயந்திரப்படகு பாவனை ஏன்?

இக்கடற்பரப்பில் தினமும் 300 இற்கும் மேற்பட்ட இயந்திரப் படகுகள் வந்து தொழிலில் ஈடுபடுகின்றன.

இயந்திரப் படகுப் பாவனையால் மீன்பிடி வலைகள் அறுக்கப்படுதல், கண்டல் தாவரங்கள் அழிக்கப்படல், மீன் கருக்கட்டல் குறைவடைந்து செல்லல், கடல் மாசடைதல் போன்ற பல பிரச்சினைகள் காணப்படுகின்றன.

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களை முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் சிறுகடலில் மீன்பிடிக்க அனுமதித்தது யார் என மக்கள் கேள்வியெழுப்புவதுடன் நீரியல்வள சட்டத்தின்படி சிறுகடலில் படகு, இயந்திரம் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே, இவ்விடயம் தொடர்பில் உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுத்து வெளிமாவட்ட மீனவர்களின் அத்துமீறலை தடை செய்ய வேண்டுமென அப்பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ம-267)




## அதிரடி சோதனையில் 15 வர்த்தகர்கள் சிக்கினர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, முள்ளியவளை பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் நடத்தப்பட்ட அதிரடி சோதனை நடவடிக்கைகளின் போது 15 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

காலாவதியான பொருட்களை விற்றமை, விலையை அதிகரித்து விற்றமை, விலைப்பட்டியலைக் காட்சிப்படுத்தாது விற்றமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆஜர்படுத்தப்பட்ட இவர்களுக்கு 80 ஆயிரம் ரூபா அபராத தொகை விதிக்கப்பட்டதுடன், காலாவதியான பொருட்களை அழித்துவிடுமாறும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுகாதாரமற்ற முறையில் விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு நீதிபதி ஏற்கனவே உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-ம)

## கடைகள் உடைத்து பொருட்கள் திருட்டு

### பல இலட்சம் ரூபா பெறுமதி என மதிப்பீடு

(புளியம்பொக்கணை)

தர்மபுரம் பொதுச்சந்தையில் அமைந்துள்ள மூன்று பல்பொருள் வாணிப கடைகள் உடைக்கப்பட்டு பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து தெரியவருவது,

பொதுச் சந்தையில் அமைந்துள்ள மூன்று பல்பொருள் வாணிப கடைகளின் பின்புற கதவுகள் உடைக்கப்பட்டு பால்மா பைக்கற்றுக்கள், ரின்மீன்கள் மற்றும் ஏனைய பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பொதுச்சந்தையில் இரவு நேர காவலாளி நியமிக்கப்படாமையே இத்திருட்டுச் சம்பவம் இடம்பெறுவதற்கு முக்கிய காரணம் என பொது மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(ம-263)

## நகை திருடிய பெண்ணுக்கு ஒரு வருட கடூழிய சிறை

(முல்லைத்தீவு)

நகை திருடிய பெண்ணுக்கு ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனை வழங்கி முல்லைத்தீவு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மல்லாவி பாண்டியன்குளம் பகுதியில் 47ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளைக் களவாடியதாக கடந்த 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி குற்றஞ்சாட்டப்பட்டு முல்லைத்தீவு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். விசாரணையின் பின் அப் பெண்ணுக்கு ஒரு வருட கடூழிய சிறைத் தண்டனையை முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா வழங்கியுள்ளார். (அ-ம)

## வீதி அகலிப்பு பணிக்காக போக்குவரத்து நிறுத்தம்

(மல்லாவி)

முல்லைத்தீவு நகரத்தில் இருந்து கொக்குத்தொடுவாய் ஊடாக வெலிஓயா பிரதேசத்திற்கு செல்லும் பிரதான வீதியானது, வீதி அகலிப்பு பணி காரணமாக எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை வரை தற்காலிகமாக மூடப்படவுள்ளதாக முல்லை. மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ் வீதி அகலிப்பு பணி மிக துரிதமாக செயற்படுத்தப்பட வேண்டியுள்ளதால், பொது மக்களும் மற்றும் ஊர்திகளின் உரிமையாளர்களும் இப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன், மாற்றுப் பாதையாக முள்ளியவளை நெடுங்கேணி வீதியைப் பயன்படுத்தி வெலிஓயாவிற்கு செல்லுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-15)

## போதை பொருளுக்கு அடிமையான நபர்களுக்கு புனர்வாழ்வு

### நீதிபதி மா.கணேசராஜாவின் முயற்சியால்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் போதைப்பொருட்களுக்கு அடிமையாகி இருப்பவர்களை சிறைச்சாலையில் தடுத்து வைக்காது நேரடியாக புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா நடவடிக்கை எடுத்துள்ளார்.

சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தினால் இவ் விசேட செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே யாழ்.மாவட்டத்தில் நீதவானாக கடமையாற்றிய வேளையில் நீதியமைச்சினூடாக இவ்வாறான புனர்வாழ்வு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா கோரியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

நீதிபதி மாணக்கவாசகர் கணேசராஜாவின் வேண்டுகோளின்படி, நீதியமைச்சின் செயலாளர் கமலினி டி.சில்வா புனர்வாழ்வு அமைச்சிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

போதைப்பொருட்களுக்கு அடிமையானோர்களுக்கு 6 மாத காலம் பொலநறுவை குடாகலுவ புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வு அளிக்கப்படும்.

(அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் போறான் குடிகாரன்
எனக்கு ஊத்தடி கள்ளை.
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தேர்தல் விஞ்ஞாபனத்தை தெளிவாக முன்வையுங்கள்

வடக்கு மாகாண சபைத் தேர்தலையொட்டி தேர்தல் ஆணையாளர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தார்.

தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுடனான சந்திப்பில் அவர் கலந்துகொண்டார்.

தேர்தல் ஆணையாளரின் வருகை, எதற்கான தெனில் ஒழுங்கான தேர்தலை நடைமுறைப் படுத்துவதற்கானதாகும்.

எனினும் தேர்தல் நடைமுறைகளை எவரும் பின்பற்றப் போவதில்லை என்பது நிறுத்திட்ட மான உண்மை.

சுவரொட்டிகள், பதாதைகள், அடிதடிகள், கழிவு ஒயில் வீச்சுக்கள் என அனைத்தும் நடக்கவே போகின்றது.

இவை அனைத்தும் எதற்கானதெனில், ஜனநாயகத்திற்கானதாகும். அடிதடிகளும், சண்டப் பிரசண்டங்களும் சேர்ந்து ஜனநாய கத்தை பிரசவிக்கப்போகின்றது என்பதுதான் ஆச்சரியமான உண்மை.

என்ன செய்வது! வன்புணர்வுக்குட்பட்ட ஒரு பெண், மகவைப் பெற்றெடுக்கும் போது அந்த மகவு மீது அவள் கோபம் கொள்வதில்லை அல்லவா?

அதுபோல தேர்தல் நடந்து முடிந்து முடிவு தெரிந்து விட்டால் எல்லாமும் ஒரு கட்டுக்குள் வந்துவிடும். அதுவரை தேர்தல் என்றால் பிரசாரங்கள் உணர்வுபூர்வமாக நடப்பது தவிர்க்க முடியாததே.

ஆனால் வடக்கு மாகாணசபைத் தேர்த லைப் பொறுத்தவரை தேர்தலில் போட்டியிடு வோர், தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தெளிவாக முன்வைப்பது அவசியமாகும். கடந்த காலங் களில் நடந்த பாராளுமன்றத் தேர்தல்களின் போது தெளிவான உறுதியுரைகளை – அரசியல் இலக்குகளை – தாம் செய்யவுள்ள வேலைத் திட்டங்களை முன்மொழியவில்லை.

இதன் காரணமாக, தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்கென அலுவலகங்களை அமைத்து, பொதுமக்களைச் சந்தித்து, அவர் களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல், தாம் விரும்பியபாட்டில் செயல்படத் தலைப்பட்டனர்.

இதனால் தமிழ்ப் பிரதேசங்களில் இருக்கக் கூடிய அடிப்படைப் பிரச்சினைகளைக் கூட, தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிந்து கொள்ளாதவர்களாக இருந்தனர் – இருக்கின்றனர்.

எனவே அத்தகையதொரு ஆரோக்கிய மற்ற நிலைமை வடக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் தந்துவிடக் கூடாது.

ஆகையால் தேர்தலில் போட்டியிடுவோர் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை தெளிவாக பொதுமக்களிடம் முன்வைக்க வேண்டும். இதை விடுத்து பொதுமக்களிடமிருந்து வாக்கு களைப் பெறுவது மட்டுமே இலக்காக இருந்தால், வாக் களிப்பில் பொது மக்களின் பங்களிப்பு குறை வானதாகவே இருக்கும்.

அதேநேரம் வடக்கு மாகாணசபைத் தேர்த லில் போட்டியிடுவோர் முன்வைக்கின்ற கொள் கைகள், கோட்பாடுகள், செயற்திட்டங்கள் தொடர்பில் போதிய தெளிவைப் பெற்றுக் கொண்டு வாக் களிப்பு தொடர்பான தீர்மா னத்தை எடுப்பது உசிதமானதாகும்.

இதைவிடுத்து தேர்தல் பிரசாரம் ஒரு புறம், பொதுமக்கள் மறுபுறம் என்ற நிலைமை இருந் தால், வடக்கு மாகாணசபையின் தேர்தலால் எந்தப் பிரயோசனமும் இல்லாமல் போய்விடும்.

# மீனவர் மீதான தாக்குதலை தடுக்க கச்சதீவை மீளப் பெறவேண்டும்

## அ.தி.மு.க. உறுப்பினர் தெரிவிப்பு

மீனவர்கள் மீதான தாக்குதலைத் தடுக்க கச்சதீவை திரும்ப பெறுவதுதான் ஒரே வழியாகும் என அ.தி.மு.க. உறுப்பி னர் மைத்ரேயன் நேற்று மாநிலங்கள் வையில் தெரிவித்தார்.

மாநிலங்களவையில் தமிழக மீன வர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது குறித்து பேசும் போது அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் செயலற்ற தன்மையால் தமிழக மீனவர் கள் இலங்கை கடற்படையினரால் தாக் கப்பட்டு கைது செய்யப்படுகின்றனர்.

இலங்கை சிறையில் தற்போது நூற்றுக்கும் மேற்பட்ட கைதிகள் உள்ள னர். அவர்களை மனிதாபிமான முறையில் விடுதலை செய்ய வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங் கோரிக்கை விடுத்தார். ஆனால் அதனையும் மீறி மீனவர்களின் காவலை இலங்கை நீடித்துள்ளது.

2007ஆம் ஆண்டுமுதல் 2009ஆம் ஆண்டு வரை தமிழக மீனவர்கள் 340 பேர் இலங்கை கடற்படையின ரால் சிறை பிடிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக இலங்கையில் உள் நாட்டுப் போர் முடிந்த பிறகு தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது அதிகரித்துள்ளது. மத்திய அரசால் நாங்கள் கைவிடப்பட்டு விட்டோம். தமிழக மீனவர்கள் இந்திய கடற் பகுதியிலேயே தாக்கப்படுகிறார்கள்.

மீனவர்கள் மீதான தாக்குதலைத் தடுக்க கச்சதீவை திரும்ப பெறுவது தான் ஒரே வழியாகும். இலங்கைப் படை தாக்கு வதை இனியும் சகித்துக் கொள்ள முடியாது.

தாக்குதலை நிறுத்துமாறு இலங்கை அரசுக்கு கண்டிப்புடன் தெரிவிக்க வேண்டும். சிறையில் உள்ள மீனவர் களை மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (செ –11)

# தமிழ்க் கூட்டமைப்பின் பரப்புரைக் கூட்டம்

வடக்கு மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு கூட்டமைப்பின் மாபெரும் தேர்தல் பரப்புரைக் கூட்டம் மற்றும் வேட்பாளர் அறிமுக நிகழ்ச்சி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்ட பத்தில் பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சோ. சேனாதிராசா தலைமை யில் நடைபெறும்.

இதில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வேட்பாளர்கள் கலந்து கொள் கின்றனர். (அ–2)

## சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

### இந்துவாக வாழ்வோம்

நல்லைக் கந்தப்பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்கள்

22.08.2013க்கான **வினாவும் விடையும்:-**

**வினா:-** **வேதாந்த சித்தாந்தம் கற்றதனாலென்ன வேடிக்கைக் கதைகள் பேசினாலென்ன வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால் வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே... என்று கூறியவர் யார்?**

**விடை:** யோகர்சுவாமிகள்

23.08.2013: **வினா:-ஐந்து விதமான யாகங்கள் (கடமைகள், யக்ஞங்கள்) எவை?**

விடை நாளை...

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடைகளை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி (01.09.2013) நண்பகல் 12 மணிமுதல் பிற்பகல் 4 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் கையளிக்கும் போது துணுக்குகளில் வரும் கேள்விகளுக்கு சரியான பதிலைச் சொல்லும் அனைவருக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். 18 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.

**சின்மயா மிஷன்**
**யாழ்ப்பாணம்**

**இல.9, செட்டித்தெரு ஒழுங்கை,**
**நல்லூர்.**




**கொடுமை கண்டு பயம் எதற்கு?**

**நபிகள் நாயகம் (ஸல்) அவர் கள்:** "அக்கிரமம் செய்கின்றவன் நிச்ச யமாக அவனையே அக்கிரமத்தில் மூழ்கடிக்கிறான். ஆனால் அவனால் இதனை உணர்ந்து கொள்ள முடிவதி ல்லை" என்றும் "அக்கிரமக்காரர்கள் நிச்சயமாகதண்டனை அடைவார்கள்" என்றும் கூறும் நாயகம் "எவனுடைய தீங்கான செயலுக்கு பயந்து மக்கள் அவனுக்கு மரியாதை கொடுக்கின் றார்களோ அவர்களே மக்களில் மகா கெட்டவர்கள்" என்றும் ஆணித்தரமா கச் சொல்கிறார்கள்.




மனத்துணையோடு வாழ்தல் என ஒரு வாழ்வியல் இலக்கியங்களிலே குறிப் பிடப்பட்டுள்ளது. மனம் என்பது வடசொல் எனக் கருதப்படுகிறது. ஆனால் மன் என் பதை அடிச்சொல்லாகக் கொண்டாகக் கொள்ளின் நிலைத்திருப்பது எனப்பொ ருள் தரும் தமிழ்ச்சொல்லாகும். மனதிலே நினைப்பதற்கு ஒரு துணை கிடைத்து விட்டால் வாழ்வில் தனிமை என்ற துயர த்தை நீக்கி விடலாம். மணிவாசகர் அத் துணையைப்பாடலிலேகுறிப்பிட்டுள்ளார்.

இறைவனைப் பற்றிக் குறிப்பிடும் போது பழைய வினையுடைய என் மன திற்குத் துணையானவனே எனது அந் தமில்லாத, அழிவில்லாத வீடுபேறாகிய நல்வாழ்வுக்கு முதற்பொருளாக உள்ள வனே. எனக்கு இளைப்புற்றபோது ஒரு வனுக்குப் புதையல் கிடைத்தாற் போலக் கிடைத்தவனேஎன்கிறார். எனவே உன்னை நான் நன்கு அறிந்து கொண்டேன் என் பதை விண்ணப்பம்செய்கிறேன். ஆனால் என்னுடைய தற்போதைய நிலையை யும் நான் விளக்கிக்கூற விரும்புகிறேன்.

திணைத்துணையேனும் பொறேன் ஆக்கையின் திண்வலையே என அவர் உரைக்கின்றார். விட்டு வெளியே வர முடியாத திண்ணிய வலைபோன்ற [illegible] என்னால் பொறுத்திருக்கமுடியாது. திண்மையான வலையிலகப்பட்ட விலங்கு அதனைவிட்டு வெளியே வரமுடியா மல் பெருந்துன்பப்படும். அதேபோல இவ்வுடம்பினுள் அகப்பட்ட உயிர் அதி லிருந்து வெளியே வரமுடியாமல் அந்த உடம்பினால் ஏற்படும் துன்பங்களை யெல்லாம் அனுபவிக்கும். இங்கே பிரா ரர்த்த வினைக்கீடாகத் தமக்குக் கிடை த்த உடலை நீக்கமாட்டாது அதனாலுண் டாகும் துன்பங்களையும் பொறுக்க மாட் டாமல் திணைத்துணையேனும்பொறேன் என மணிவாசகர் பாடியுள்ளார்.

என்னை நீ கைவிட்டுவிடாதே எனக் கேட்கும் அவர் சற்று ஐயப்பாட்டுடன் இருப்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

தனித்துணை நீ நிற்க யான் தருக் கித் தலையால் நடந்த வினைத் துணை யேனை ஒப்பற்ற ஒரு துணையாக இறைவன் நிற்க அதனை மறந்து யான் என்னும் செருக்குற்று அதனால் தலைகீழாக நடந்த வினையைத் துணையாகக் கொண்டிருப்பதால் நீ என்னைக் கைவிட்டுவிடுவாயோ என நான் ஐயம் அடைந்துள்ளேன் என் கிறார். தான்செய்த தவறு என்னவென் பதை எடுத்துக்கூறும் அவருடைய பண்பு எல்லோருக்கும் தேவை. இன்னும் தலை கீழாக நடத்தல் என்ற மரபுத் தொடரும் தலையால் நடத்தல் என்ற மரபுத் தொட ரும் பயன்பாட்டில் உள்ளன. தலை கீழாக நடத்தல், தலையால் நடத்தல் என்ற இரு தொடர்களும் முறைமாறி நடத்த லையே குறிக்கும். மேலும் இறை வனை எனக்கு எய்ப்பில் வைப்பே எனக் குறிப் பிட்டுள்ளார். எனக்கு, நீ நான் பெற்ற பெருஞ் செல்வம் என்பதையுணர்ந்த போது கைவிடமாட்டாய் என்ற நம்பிக்கை ஏற்படுவதாகக்கூறுகிறார்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

எய்ப்பில் வைப்பு என்பது ஒருவன் பொருளின்றி இளைப்புற்ற போது கிடைத்த புதைபொருளாகும். எனவே மணிவாசகர் மனித வாழ்வியலில் செருக்குற்று நடக்கும் போதும் துன் பங்கள் தோன்றும் எனக்கூறுகிறார். பக்தியின் மூலம் இச் செருக்கை இனங் காணலாம். இறைவனே எமக்கு என்றும் தனித்துவமான துணை என்பதை மணி வாசகர் உணர்த்துகிறார்.

**தனித்துணை நீ நிற்க யான் தருக்கித்**
**தலையால் நடந்த**
**வினைத்துணையேனை விடுதி கண்டாய்**
**வினையேனுடைய**
**மனத்துணையேயென்றன் வாழ்முதலே**
**எனக்கெய்ப்பில் வைப்பே**
**திணைத் துணையேனும் பொறேன் துயர்**
**ஆக்கையின் திண்வலையே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியானது ஐ.சி.சி. இன் ரி-20 கிரிக்கெட் தரவரிசை

ரி-ருவென்ரி கிரிக்கெட் துடுப்பாட்டம், பந்துவீச்சு, அணிகளின் நிலை ஆகியவற்றின் தரவரிசையை வெளியிட்டுள்ளது ஐ.சி.சி.


இதில் நியூஸிலாந்தின் பிரெண்டன் மெக்கல்லம் முதலிடத்திலும், இங்கிலாந்தின் அலெக்ஸ் ஹேல்ஸ் 2ஆவது இடத்திலும் உள்ளனர்.

பந்து வீச்சாளர்கள் தரவரிசையைப் பொறுத்தவரையில் மேற்கிந்தியத் தீவுகளின் சுனில் நரேன் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

அணிகளின் தரவரிசையில் இலங்கை 128 புள்ளிகளுடன் முதலிடத்திலும், பாகிஸ்தான் 124 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும், இந்தியா 121 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திலும் உள்ளன. பாகிஸ்தான்-சிம்பாவே அணிகளுக்கு இடையிலான இரு ஆட்டங்கள் கொண்ட இருபது ஓவர் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

இதில் பாகிஸ்தான் 2-0 என்ற கணக்கில் வெற்றி பெறும் பட்சத்தில், தரவரிசையில் முதலிடத்தைப் பிடிக்க முடியாது என்றாலும், மேலும் ஒரு புள்ளியைப் பெற முடியும். அதேவேளையில் சிம்பாவே 2-0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றினால், தரவரிசையில் 12ஆவது இடத்தில் இருந்து 11ஆவது இடத்துக்கு முன்னேறும்.

# இதுவரை நான் கிரிக்கெட் பார்த்ததில்லை - லீசாங்வி




இதுவரை நான் கிரிக்கெட் போட்டியை பார்த்ததே இல்லை என்று பூப்பந்தாட்ட முன்னணி வீரர் லீ சாங் வி தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடைபெற்ற இந்தியன் பூப்பந்தாட்ட லீக் போட்டியைக் காண இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் சென்றிருந்தார். அப்போது போட்டியில் பங்கேற்றிருந்த பூப்பந்தாட்ட வீரர் லீ, சச்சினை சந்தித்து உரையாடினார்.

சச்சினைச் சந்தித்தது குறித்து லீசாங் கருத்துவெளியிடுகையில்,

அவரை சந்திப்பது இதுவே முதல் முறை. என்னுடைய போட்டியைக் காண அவர் நேரில் வந்திருப்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. ஒரு நாள் கிரிக்கெட் போட்டியை நானும் நேரில் சென்று பார்க்க உள்ளேன். இதுவரை நான் கிரிக்கெட் போட்டியை பார்த்ததே இல்லை என்று கூறினார்.

# டெனிஸ் வீரர் தரவரிசையில் வீழ்ச்சி



சுவிட்சர்லாந்து டெனிஸ் வீரர் ரோஜர் பெடரர் தொடர்ச்சியான தோல்விகளால் தரவரிசையிலும் வீழ்ச்சியை சந்தித்து வருகிறார். புதிதாக வெளியிடப்பட்ட தரவரிசையில் அவர் 5ஆவது இடத்தில் இருந்து 7ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

கடந்த 11 ஆண்டுகளில் அவரது மோசமான தரநிலை இதுவாகும்.

இதற்கிடையே, வருகிற 26ஆம் திகதி நியூயோர்க்கில் தொடங்கும் அமெரிக்க ஓபன் டெனிஸ் போட்டிக்கான தரநிலையை, போட்டி அமைப்பாளர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இதில் சேர்பியாவின் ஜோகோவிச் முதலிடத்தையும், ஸ்பெயினின் ரபெல் நடால் 2ஆவது இடத்தையும், நடப்பு சம்பியன் அமெரிக்காவின் ஆன்டி முர்ரே 3ஆவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

17 கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை கைப்பற்றியவரான பெடரருக்கு, இங்கும் 7ஆவது இடமே கிடைத்துள்ளது. கிராண்ட்ஸ்லாம் போட்டி தரவரிசையில் டாப் 3 இடத்தை விட்டு அவர் வெளியேற்றப்பட்டிருப்பது கடந்த 10 ஆண்டுகளில் இதுவே முதல் முறையாகும். கடைசியாக 2003ஆம் ஆண்டு விம்பிள்டன் டெனிஸ் போட்டியின்போது, அவருக்கு போட்டித்தரவரிசையில் 4ஆவது இடம் வழங்கப்பட்டிருந்தது.




# உலகக் கிண்ணக் காற்பந்து போட்டி; ரிக்கெட் முற்பதிவுக்கு அதிகளவானோர் விண்ணப்பம்


உலக கிண்ணக் காற்பந்து போட்டிக்காக ரிக்கெட் முற்பதிவுசெய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

சர்வதேச காற்பந்து கூட்டமைப்பு (பிபா) சார்பில், 20ஆவது உலக கிண்ணத் தொடர் அடுத்த ஆண்டு (2014) ஜூன் 12 முதல், ஜூலை 13 வரை, பிரேசிலில் நடக்கவுள்ளது. இதற்கான டிக்கெட் விற்பனை, எதிர்வரும் ஒக் 10 முதல் ஆரம்பமாகிறது.

இருப்பினும், இப்போதிருந்தே காற்பந்து ரசிகர்கள் டிக்கெட் கேட்டு விண்ணப்பிக்கத் தொடங்கிவிட்டனர். சாவ் பாவ்லோ மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டிக்கு (2014, ஜூன் 12) 1,68,000க்கும் அதிகமானோர் டிக்கெட் கேட்டுள்ளனர்.

ரியோ டி ஜெனிரோவில் நடைபெறவுள்ள இறுதி ஆட்டத்துக்கு (2014, ஜூலை 13), 1,65,000 பேர் விண்ணப்பித்துள்ளனர். இதில் பெரும்பாலானவை பிரேசில், ஆர்ஜென்டீனா, அமெரிக்கா, சிலி மற்றும் இங்கிலாந்தில் இருந்து வந்தவையாம்.

# இங்கிலாந்து வீரரை கடுமையாகச் சாடுகிறார் லீமன்



இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் ஸ்ருவேர்ட் ப்ரோட் ஓர் ஏமாற்றுக்காரர் என அவுஸ்திரேலிய அணியின் பயிற்றுவிப்பாளர் டெரன் லீமன் கடுமையாகச் சாடியுள்ளார்.

5ஆவது டெஸ்ட் போட்டி ஆரம்பித்துள்ள நிலையில், அவர் வானொலிப் பேட்டியொன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ஆஷஷ் தொடரின் முதலாவது போட்டியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாகவே டெரன் லீமன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முதலாவது போட்டியில் ஸ்ருவேர்ட் ப்ரோட் துடுப்பெடுத்தாடியபோது அஸ்ரன் ஏகரின் பந்தைத் தட்ட முனைந்த போது பந்து அவரது துடுப்பில் பட்டு, பிரட் ஹடினின் கையுறைகளில் பட்டு, முதலாவது ஸ்லிப்பில் காணப்பட்ட மைக்கல் கிளார்க்கின் கைகளை அடைந்தது.

ஸ்ருவேர்ட் ப்ரோட்டின் துடுப்பில் பந்து பட்டதைக் கவனிக்காத நடுவர் அதற்கு ஆட்டமிழப்பு வழங்க மறுத்ததோடு, ஸ்ருவேர்ட் ப்ரோடும் மைதானத்தை விட்டு வெளியேறாமல் இருந்தார்.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள டெரன் லீமன், பந்து முதலாவது ஸ்லிப்பிற்குச் சென்ற பின்னரும் மைதானத்தை விட்டு வெளியேறாத ஸ்ருவேர்ட் ப்ரோட் ஓர் ஏமாற்றுக்காரர் எனக் குறிப்பிட்டதோடு, சாதாரணமாக ஆட்டமிழக்கும்போது துடுப்பாட்ட வீரர்கள் நடுவரின் தீர்ப்புக்குக் காத்திருக்காது வெளியேற வேண்டும் என தான் எதிர்பார்ப்பதில்லை எனவும், ஆனால் முதலாவது ஸ்லிப்பிற்குச் சென்ற பின்னர் வெளியேறாமல் விட முடியாது எனக் குறிப்பிட்டார்.

அடுத்த ஆஷஷ் தொடருக்காக இங்கிலாந்து அணி அவுஸ்ரேலியாவிற்குச் செல்லவுள்ள நிலையில், அங்கு வைத்து அவுஸ்ரேலிய ரசிகர்கள் ஸ்ருவேர்ட் ப்ரோட் மீது அழுத்தங்களை வழங்குவார்கள் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார் அவுஸ்திரேலிய அணியின் பயிற்றுவிப்பாளர் டெரன் லீமன்.

# ஆடுகளத்தில் நடந்ததை விபரிக்கிறார் ஸ்ருவேர்ட்

முன்னதாக இந்த வாரம் தொடக்கத்தில் ஸ்டூவர்ட் பிராட் அளித்த ஒரு பேட்டியொன்றில்,

'ஆமாம்... பந்து துடுப்பில்பட்டது உண்மை தான். ஆனால் இந்த தொடரை நீங்கள் பார்த்தீர்களே என்றால், சில அவுஸ்திரேலிய வீரர்களும் அதாவது டேவிட் வோர்னர், கஜாஜா, ஸ்டீவன் சுமித், கிளார்க், ஆஷ்டன் அகர் ஆகியோரும் பந்து துடுப்பில் உரசி பிடிஎடுத்த போது உடனடியாக வெளியேறாமல் இருந்ததை பார்த்திருக்கலாம். இந்த வகையிலான பிடிகளில் நிறைய வீரர்களுக்கு இது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கத்தான் செய்கிறது. ஆனால் என்னை மட்டும் குறி வைத்து வசைபாடுவது ஏன்?

எனது துடுப்பில் உரசிய பந்து, விக்கெட் காப்பாளரின் கையுறை பக்கமாக தாண்டி முதலாவது ஸ்லிப்புக்கு சென்றது. உடனே நான் எதிர்முனையில் நின்ற சக வீரர் இயான் பெல்லிடம் இதுபற்றி கேட்டேன். அதற்கு இங்கு என்ன நடந்தது, எனக்கு எந்த சத்தமும் கேட்கவில்லையே என்று கூறினார். பந்து வீசிய ஆஷ்டன் அகரும், பந்து துடுப்பில் உரசியதை என்று உறுதியாக சொல்லவில்லை. எல்லோருக்கும் குழப்பம் இருந்தது. அதனால் தான் தொடர்ந்து களத்திலேயே இருப்பது என்று முடிவு செய்தேன்' என்றார்.

2015ஆம் ஆண்டு உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டி அவுஸ்திரேலியாவில் நடக்க இருப்பதால், அடுத்த ஆஷஸ் தொடர் வருகிற நவம்பர் 21ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் ஆரம்பமாகிறது.

# பனேசர் இங்கிலாந்து அணிக்காக விளையாடமுடியும் – குக்

இங்கிலாந்து அணியின் சுழற்பந்துவீச்சாளர் மொண்டி பனேசர் தொடர்ந்தும் இங்கிலாந்து அணிக்காக விளையாட முடியும் என அணித் தலைவர் அலிஸ்டெயர் குக் தெரிவித்துள்ளார்.

திறமை வாய்ந்த பந்துவீச்சாளரான மொண்டி பனேசர் தமது அணிக்கு தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பருவகாலத்துடன் சசெக்ஸ் பிராந்திய அணியில் இருந்து பனேசர் விலகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டதை அடுத்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இந்த மாத ஆரம்பத்தில் மதுபானசாலையில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றிற்காக அவருக்கு பொலிஸார் அபராதம் விதித்திருந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து 31 வயதான மொண்டி பனேசர் கழகத்தின் உள்ளக விசாரணையை எதிர்நோக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

48 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள மொண்டி பனேசர் 164 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுஎஸ் ஓபன் டென்னிஸ் ஷரபோவா விலகல்

பிரபல கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான யு.எஸ். ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டி வருகிற 25-ம் திகதி தொடங்குகிறது.

உலகின் முன்னணி வீரர், வீராங்கனைகள் இதில் பங்கேற்று பட்டம் வெல்ல பலப்பரீட்சை நடத்த உள்ளனர்.

இந்நிலையில் ரஷ்யாவின் முன்னணி வீராங்கனையான மரியா ஷரபோவா காயம் காரணமாக யு.எஸ். ஓபனில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். தோள்பட்டை காயத்தால் அவதிப்பட்டு வருவதால் ஷரபோவா இந்த முடிவை எடுத்துள்ளாராம்.

இதற்கிடையே மரியா ஷரபோவா தான் நடத்தி வரும் கேண்டி நிறுவனத்தை பிரபல படுத்துவதற்காக தனது பெயரை மாற்ற முடிவு செய்துள்ளார்.

மரியா சுகர்போவா என் பெயரை மாற்றிக்கொள்ள அனுமதி கேட்டு ஷரபோவா நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.



# கார்த்திக் வலையில் சிக்கினார் தீபிகா!

திரையுலகைச் சேர்ந்த நட்சத்திரங்கள் காதலில் விழுவது போல விளையாட்டு உலகிலும் ஒரு புதிய காதல் பூத்துள்ளது.

ஸ்குவாஷ் போட்டியில் கலக்கிக் கொண்டிருப்பவர் சென்னையில் பிறந்தவரான மலையாளத்து தீபிகா பல்லிக்கல்.

இளம் வயதிலிருந்தே புகழுச்சியில் இருக்கும் தீபிகா ஸ்குவாஷ் வீராங்கனைகள வரிசையில் சர்வதேச அளவில் உச்சத்தில் உள்ளார்.

தீபிகாவின் அழகில் மயங்கிய திரையுலகினர் அவரை நடிக்க வைக்க கடுமையாக போராடிப் பார்த்தார்கள். ஏன் நடிகர் சிம்பு கூட தீபிகாவை அணுகியதாகக் கூறபட்டது. ஆனால் அழகாக சிரித்தபடி அத்தனை அழைப்புகளையும் நிராகரித்து விட்டார தீபிகா.


கிசுகிசுக்கள் எதிலும் சிக்காமல் இருந்த தீபிகா தற்போது தினேஷின் காதல் பந்தில் போல்டாகி விட்டார்.

தமிழகத்தைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர் தினேஷ் கார்த்திக் 21 வயதிலேயே நிகிதா என்பவரை மணந்தார். சின்ன வயது முதலே பழகியவர் நிகிதா. ஆனால் இந்தத் திருமணம் சீக்கிரமே உடைந்து போனது.

நிகிதாவுக்கும், இந்திய கிரிக்கெட் அணியில் இருந்த ஒரு வீரருக்கும் இடையே ரகசியத் தொடர்பு இருந்துள்ளதாம். இந்த வீரர், தினேஷின் நெருங்கிய நண்பரும் கூட.

இதனால் அதிர்ச்சியாகிப் போன தினேஷ் மனைவியை விட்டுப் பிரிந்தார். பின்னர் விவாகரத்து செய்து விட்டார்.

நிகிதாவைப் பிரிந்த பின்னர்தான் அவர் கிரிக்கெட்டில் முழுவீச்சில் ஆர்வம் காட்டினார். பல போட்டிகளில் பட்டையைக் கிளப்பினார். இந்திய அணியில் தற்போது அவருக்கு ஒரு நல்ல இடம் கிடைத்துள்ளது.



இந்நிலையில், சென்னையில் உள்ள ஒரு உடற்பயிற்சிக் கூடத்தில் வைத்து தீபிகாவை சந்தித்துள்ளார் தினேஷ் முதல் பார்வையிலேயே அவர்களுக்குள் ஏதோ புரிந்து போய் விட்டதாம். அதன்பின்னர் அடிக்கடி சந்திக்க நட்பு பூத்து, காதலாகி கணிந்தது.

கடந்த மார்ச் மாதம் பயிற்சிக்காக இங்கிலாந்து போயிருந்த தீபிகாவை சந்தித்து இனிய அதிர்ச்சி கொடுத்தார் தினேஷ்.

பின்னர் சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியில் ஆடியபோது தினேசுடன் நிறைய நேரத்தை செலவிட்டுள்ளார் தீபிகா.

தீபிகாவுடன் ஏற்பட்டுள்ள இந்தக் காதலால்தான் தினேஷ் கார்த்திக் முன்பை விட சிறப்பாக ஆடுவதாக கூறுகின்றனர்.

தீபிகாவின் காதல் உண்மைதான் என்று அவரது வீட்டார் கூறுகின்றனர். இந்தக் காதலுக்கு இரு வீட்டாரும் பச்சைக் கொடி விட்டனராம்.

இருவருக்கும் இடையே நிச்சயதார்த்தம் கூட முடிந்து விட்டதாகவும் சொல்கிறார்கள். திருமணம் எப்போது என்பது இன்னும் முடிவாகவில்லை.

# காதலியை மணந்தார் அக்ரம்

47 வயதான பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் வசீம் அக்ரம் தனது 30 வயதான அவுஸ்திரேலிய காதலி தாம்சன் ஷனீராவை மணந்ததாக நேற்றுமுன்தினம் அறிவித்தார்.

லாகூரில் சென்ற 12-ம் தேதி எளிமையாக நடந்த விழாவில் நான் ஷனீராவை திருமணம் செய்துகொண்டேன். இது எனக்கு, எனது மனைவி, மகன்களுக்கும் ஒரு புதிய வாழ்க்கையின் தொடக்கமாக இருக்கிறது என்றும் அவர் கூறினார்.



அவுஸ்திரேலியாவை சேர்ந்த முன்னாள் மக்கள் தொடர்பு ஆலோசகரான காதலி ஷனீராவிடம் வாசிம் அக்ரம் திருமணம் செய்துகொள்வது குறித்து கடந்த மாதம் பேசினார். இதனையடுத்து இருவீட்டார் சம்மதத்துடன் சென்ற அவர்கள் திருமணம் செய்து கொண்டனர்.

அவரது முதல் மனைவி ஹுமா நோய்வாய் பட்டநிலையில் 2009-ம் ஆண்டு சென்னையில் இறந்தார்.

உடல் நிலை சரியில்லாத தனது தந்தையின் விருப்பத்திற்கு ஏற்பவும், திருமணம் செய்து கொள்ளாமல் இருவர் சேர்ந்து வாழவது இஸ்லாத்துக்கு எதிரானது என்று மதபோதகர் கூறியதை அடுத்தும் இந்த திருமணம் நடந்தது என்று கூறப்படுகிறது.

# ஆஸியின் கோரச் செயல்...

யிட்டிருந்தனர்.

தடுத்துவைக்கப்பட்டதை எதிர்த்து அவுஸ்திரேலிய நீதிமன்றங்களில் வழக்குத் தொடர தங்களுக்கு வழியில்லாமல் இருப்பதை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில் இவர்களை அவரவர் நாட்டுக்கு திருப்பி அனுப்ப முடியாது. ஆனால் அவுஸ்திரேலியாவுக்குள் அனுமதிக்கப்பட்டால் இவர்கள் பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்துவார்கள் என்று கருதப்பட்டு, குடிவரவுத் துறையின் தடுப்புக்காவல் மையத்திலேயே இவர்கள் அடைத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த அகதிகள் தடுத்துவைக்கப்பட்டது எதேச்சதிகாரமான செயல் என்றும், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வ தேச உடன்பாட்டின் 9-ம் ஷரத்தை மீறும் செயல் என்றும் சுயாதீன மனித உரிமை நிபுணர்கள் 18 பேர் அடங்கிய ஐ.நா குழு கண்டறிந்துள்ளது.

2009 மார்ச் மாதத்துக்கும் 2010 டிசம்பர் மாதத்துக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அவுஸ்திரேலியாவுக்கு வந்திருந்த இந்த தஞ்சக் கோரிக்கையாளர்களில் பெரும்பான்மையானோர் முதலில் கிறிஸ்துமஸ் தீவில் இறங்கியிருந்தவர்கள்.

இவர்களில் ஐந்து பேர் கடலில் இருந்து மீட்கப்பட்டு முதலில் இந்தோனேஷியாவில் கரைக்கு கொண்டுவரப்பட்டு பின்னர் கிறிஸ்துமஸ் தீவுக்கு கொண்டுவரப்பட்டவர்கள்.

தாம் ஏன் பாதுகாப்பு அச்சுறுத்தலாகக் கருதப்படுகிறோம் என்று தமக்குத் தெரிவிக்கப்படவில்லை எனவும், அவுஸ்திரேலிய நீதிமன்றங்களில் தமது தடுப்புக்காவலை எதிர்த்து மறுஆய்வு மனு தொடுக்கும் சட்ட வழிமுறைகள் தமக்கு இல்லை என்றும் இந்த அகதிகள் ஐ.நா மனித உரிமைக் குழுவிடம் முறையிட்டிருந்தனர்.

தடுத்துவைக்கப்பட்டவர்களில் 7 பேர் மட்டும் விடுவிக்கப்பட்டு அவுஸ்திரேலிய சமூகத்தில் இணைக்கப்பட்டுள்ளனர் என ஐநாவின் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.(எ-11)

# மதூஸன் ஹற்றிக் சாதனை; ஜொலிஸ்ரார் காலிறுதிக்கு தகுதி

சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III இற்கான சுற்றுப்போட்டிக்கு யாழ்.மாவட்டத்தில் இருந்து ஓர் அணியை தெரிவு செய்வதற்கான தகுதிகாண் சுற்றுப் போட்டி ஒன்றினை யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தி வருகின்றது.

அந்த வகையில் ஜொலிஸ்ரார் அணிக்கும் பற்றீசியன்ஸ் அணிக்கும் இடையில் 7ஆவது தகுதி காண் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் ஜொலிஸ்ரார் அணி, பற்றீசியன்ஸ் அணியை 129 ஓட்டங்களால் வெற்றிபெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 49.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 238 ஓட்டங்களைப் பெற்றது.

கல்கோவன் 93, கஜனன் 36, சோபன் 34, அருண் 18 ஓட்டங்களைப் பெற்றனர்.

மொறீஸ் 3, ருவிங்ரன் 3, தனுஸ், நிதர்ஸன தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

239 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய பற்றீசியன்ஸ் அணி 25 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றனர்.

பத்மமுரளி 41, தனுஸ் 21 ஓட்டங்களைப் பெற்றனர். மதூஸன் ஹற்றிக் உட்பட 5 விக்கெட்டுகளையும் பிரியதர்சன் 2 விக்கெட்டுகளையும் உமாகரன், பானு, அருண தல ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

இப் போட்டியில் வெற்றிபெற்ற ஜொலிஸ்ரார் அணி, ஜொனியன்ஸ் அணியுடன் எதிர்வரும 31ஆம் திகதி காலிறுதிப் போட்டியில் (13ஆவது தகுதிகாண் போட்டி) மோதவுள்ளது.

இப் போட்டியின் மூலம் சிறந்த அணி தெரிவுக்கு ஜொலிஸ்ரார் அணி 8.3 புள்ளிகளையும், பற்றீசியன் அணி 2 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய நிலைமையில் தரவரிசைப் பட்டிலில் ஜொலிஸ்ரார் அணி 4ஆம் இடத்திலும், பற்றீசியன் அணி 16ஆம் இடத்திலும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கால்பந்தாட்ட சுற்றுப் போட்டி; றோயல்,அண்ணா ஸ்ரார் வெற்றி

யாழ். மாவட்ட கால்பந்தாட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் அணிக்கு 9 பேர் கொண்ட விலகல் முறையிலான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஊரெழு றோயல் அணி, அண்ணா ஸ்ரார்ஸ் அணி ஆகியன வெற்றி பெற்றுள்ளன.

நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம், மறைந்த கழக உறுப்பினர் குமார் தேவராசா ஞாபகார்த்தமாக யாழ். மாவட்ட கால்பந்தாட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் அணிக்கு 9 பேர் கொண்ட விலகல் முறையிலான கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை கடந்த ஞாயிற்றுக்கிழமையிலிருந்து கழக விளையாட்டு மைதானத்தில் நடத்தி வருகின்றது.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற போட்டியில் முதல் போட்டியில் இளவாலை ஹென்றிஸ் அணியினை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது. இப்போட்டியில் ஊரெழு றோயல் அணி 3 : 2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் பாஷையூர் சென். அன்ரனீஸ் அணியினை எதிர்த்து அண்ணா ஸ்ரார்ஸ் அணி மோதியது. இப்போட்டியில் அண்ணா ஸ்ரார்ஸ் அணி 2 : 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SLEAS கருத்தரங்கு**

**நடைபெறவுள்ள இப் பரீட்சைக்கான கருத்தரங்குகள்**

யாழ். நகரில் :– யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில்
ஒவ்வொரு ஞாயிறும் 1 மணிக்கு

வவுனியாவில் :– கதிரேசன் வீதியில் CBA கல்வி நிலையத்தில்
நாளை சனி 1 மணிக்கு

தொடர்புகட்கு : 0754164564

(C-4426)

**STUDY WITH O/Level**
**HOTEL MANAGEMENT in SINGAPORE**
**WORK with HIGH PAYED PLACEMENT**
Male/ Female 18-37 Yrs

* 3 மாதம் படிப்பு, 6 மாதம் சம்பளத்துடன் கூடிய பயிற்சி
* பயிற்சியின் போது மாதம் Rs 100,000 மேல்
* Payment after the Visa
* UK, NEW ZELAND, Italy, Switzerland, France & Canada போன்ற இடங்களுக்கு இடமாற்றம் பெறமுடியும்

Save for Females. No Visa Interview. No IELTS.

சனிக்கிழமை விசேட கருத்தரங்கு
24-08-2013

* Condition Apply

GSW GLOBAL STUDY & WORK CONSULTANTS
Tel : 077 007 1835
Mail : gswvisa@gmail.com



**Dutch, Deutsch, French**



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன்-Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து- Dutch (டச்) புதிய பிரிவுகள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.

* French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
* Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
* Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

**Vivekananda Academy**
221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.
Tel: 0213216928, 0774842464
(Gov. Reg.No: W/A 76795)
(C-4418)


## இந்தியாவின் வாக்குறு...

வடபகுதி மக்களின் பிரச்சினைகளுக்கு பதிலளிக்க வேண்டும் என்று குறிப்பிட்ட அவர், எம்மைவிட அவர்களது வாழ்க்கை சிரமமானது.

யுத்தம் முடிவடைந்து 4 வருடங்கள் கடந்துள்ள நிலையில் வடபகுதி மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வுகாணவில்லை.

அவ்வாறு தீர்வு வழங்கப்பட்டிருந்தால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வட பகுதியில் தேர்தலில் வெற்றிபெற்றிருக்காது.

எனினும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்காக எதனையும் செய்த கட்சி அல்ல என சுட்டிக்காட்டினார். (எ-11)

## நவநீதம்...

தில் இடம்பெற்ற இராணுவ தாக்குதல் தொடர்பாகவும் அவர் ஆராயவுள்ளதாக கூறப்படுகிறது.

இதனைத்தவிர இறுதிக்கட்ட போர் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் பகுதிக்கும் அவர் விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-11)

## இலங்கைத் தமிழர்...

கைது செய்யப் பட்டு பின்னர் ஜாமீனில் வெளியாகி தற்போது திருச்சி சிறப்பு முகாமில் வைக்கப்பட்டுளளார், அண்மையில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரிடமிருந்து அவர் குறித்த தகவல்களைக் கேட்டு திருச்சி முகாம் அதிகாரிகளுக்கு கடிதம் வந்திருக்கிறது. ஈழநேரு இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவதற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியே அக்கடிதம் என்று அவர் கூறியுள்ளார் ஈழநேருவுக்கு வயது 44.

அவர் மீது பெரிதாக புகார் ஏதும் கிடையாது. இந்நிலையில் அவர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டால் அவரது உயிருக்கே ஆபத்து. எனவே அவர் திருப்பி அனுப்பப்படக் கூடாது என மத்திய அரசுக்கு உத்திர விடவேண்டும் என சந்திரலீலா கோரியிருக்கிறார்.

அவரது மனுவினை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் வி.தனபாலன் மற்றும் சி.டி. செல்வம் ஆகியோர் அடங்கிய அமர்வு, ஈழநேரு வழக்கினை எதிர்வரும் ஆகஸ்ட் 27ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது. அது வரை அவரை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப முடியாது. (எ-11)

## 13ஆவது...

வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித், இது குறித்து அரசு எவ்வித முடிவையும் இன்னும் எடுக்கவில்லை என்றார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்படி ஏற்படுத்தப்பட்ட 13ஆவது சட்டத் திருத்தத்தை நிறைவேற்ற இந்தியா உறுதியோடு இருப்பதாகவும் குர்ஷித் தெரிவித்தார். (எ-11)

## நீர்வழங்காததற்கு...

சிக்கின்றது.

எனவேதான் இவ்வாறான நிலைமையை ஏற்படுத்த விடாது நாட்டைப் பாதுகாக்கும் பாதுகாப்புச் செயலாளர் தொடர்பாக ஜே.வி.பி. யினர் அதிகமாக பேசுகின்றனர்.

மக்களுக்கு மாவிலாறு நீர்த் தேக்க நீரைப் பயன்படுத்த விடாது தடுத்த பயங்கரவாதிகளுக்கு எதிராகவே நாம் குண்டுகளைப்பாவித்தோமே தவிர, அப்பாவி மக்களுக்கு எதிராக ஒரு போதும் குண்டுகளைப் பாவித்ததில்லை. (எ-11)




ரிக்கெற், உணவு, இருப்பிடம்
FREE
Denmark
டென்மார்க்கில் படிக்க உழைக்க
25.08.2013 வரை மட்டுமே
சட்ட ஆலோசனை

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
(C-4423)

5வருட - 10 வருட விசா
3 இலட்சம் சம்பளம்
தங்குமிடம், உணவு இலவசம்
Free
அமெரிக்காவில் படிக்க உழைக்க அதிரடி வாய்ப்பு!
விரைந்து வாருங்கள்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
(C-4423)



என்றும் 1 தரம்! விலை!!
போலி வாக்குறுதிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்
6 Colour அதி உயர் தரத்துடன்
டிஜிற்றல் பனர் பிறிண்டிங் மற்றும் திருமண அழைப்பிதழ்கள்



நல்லூர் உற்சவகால விசேட காட்சியறை இன்று முதல்
(பருத்தித்துறை வீதி, நல்லூர் சிவன் கோவில் முன்பாக)
அதிகூடிய வாடிக்கையாளர்களைக் கொண்ட ஒரே நிறுவனம்
விவாஹாஸ்
CALL : +94 21 221 9999
244, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
www.vivahas.com vivahas@live.com
vivahascards vivahas



30 வருட கால அச்சுத்துறை அனுபவம்
அதிகூடிய அளவிலான அச்சுப்பதிப்பு நேரச்சு இயந்திரம் (Offset) எம்மிடம் மட்டுமே!
4 வர்ண அச்சுப் பதிப்பு (4 Colour Offset Printing)

- போஸ்டர்கள் (19½ x 28¾)
- கல்வெட்டுப் புத்தகங்கள்
- துண்டுப் பிரசுரங்கள்
- பருவகால வெளியீடுகள்
- கலண்டர்கள்
- விண்ணப்பப் படிவங்கள்
- மாணவர் கையேடுகள்
- திருமண அழைப்பிதழ்கள்
- Screen Printing

போன்ற அனைத்து விதமான Printing வேலைகளையும் உயர் தரத்துடனும், குறைந்த செலவுடனும் விரைந்து பெற்றுக்கொள்ள

பாரம்பரிய அச்சுத்துறையின் வழிகாட்டி
பாரதி பதிப்பகம்
இல.430, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 3081 E-mail: bhaarathiiprint@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.